பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 11 வியாழக்கிழமை (27-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:01

## உதயன்

## உதய வேளையில் உங்களுடன்...!

உங்கள் உதயன் இன்று பதினெட்டு வயதைப் பூர்த்தி செய்கின்றான். பத்தொன்பதாவது வயதில் காலடி எடுத்துவைக்கிறான். இந்த உதயவேளையில் உங்களுடன் தனது உள்ளத்து உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வதில் உதயன் உவகையடைகின்றான்.

ஈழத்தமிழரின் விடுதலைக்கான உரிமைப்போர் அஹிம்சை வழியிலிருந்து ஆயுத வழிக்குத் திரும்பி புதிய பரிமாணம் கொள்ளத் தொடங்கிய வேளையில் - காலத்தின் கட்டாயம் கருதி, தமிழர் தம் பேரெழுச்சியை உலகிற்கு எடுத்து அறையும் உன்னத பணியின் தேவையை நிறைவு செய்வதற்காக முகிழ்ந்து, உங்கள் கைகளில் தவழத் தொடங்கினான் உதயன்.

உதயனின் உயிர்ப்பின் நோக்கமும், அவனின் இயக்கத்தின் வீச்சும், செயற்பாட்டின் தாற்பரியமும், இலக்கு மீதான நோக்கும் உயர்ந்தவை. அதனால்தான் என்னவோ, ஈகத்தின் உச்சியில் தியாகத்தின் சிகரங்களைத் தொட்ட நமது உத்தம வீரமறவர்களின் நினைவை மனதில் இருத்தி நாம் பூஜிக்கும் இந்த உயரிய தினத்தில் உதயனின் ஜனனமும் நிகழ்ந்திருக்கின்றது. சந்தர்ப்பவசமாக நிகழ்ந்த ஒன்றாக இது இருந்தாலும் உதயனுக்கு உயர்வு - பெருமை - தரும் பொருத்தமே இது.

விடுதலைப்போர் வீறுகொள்ளத் தொடங்கிய வேளையில் - உங்கள் மத்தியில் - யுத்தபூமியில் - உதித்த உதயனுக்கு உங்களைப்போன்றே போரழிவும் பேரழிவும், கொடுமையும் கொடூரமும், அவலமும், நலிவும் அந்நியமானவையல்ல; மிகவும் பரிச்சயமானவை.

யுதத சனனதத்தில் நமது மக்கள் குப்புறவீழ்ந்தபோது மக்கள் மத்தியில் ஊடாடிய உதயனும் குப்புறவீழ்ந்தான். போர்வடுக்களை - அழிவுகளை - இழப்புக்களை - துயரங்களை - சுமந்தான். ஆனால், நமது மக்களைப் போலவே யுத்த அச்சுறுத்தல் கண்டு அவனும துவண்டுவிடவில்லை; அஞ்சி ஓடிவிடவில்லை. மக்களைப்போலவே அவனும் சளைக்காமல் அதே உக்கிரத்தோடும், உத்வேகத்தோடும் எழுந்துநின்றான்; புத்துயிர்ப்புப் பெற்றான்; உறுதியோடு முகம் கொடுத்தான். அதே வீரத்தோடு - வீறாப்போடு - வீச்சோடு - விவேகத்தோடு - தமிழர் தம் போராட்டத்தின் அறத்தைத் தொடர்ந்து முரசறைந்தான்; தமிழரின் உரிமைக்குரலை உலகெங்கும் முழங்கினான்.

அடக்குமுறைக்கு எதிராகப் பொங்கி எழுந்திருக்கும் வீரத் தமிழர்களின் விடுதலை வேட்கையையும், ஈழத்தமிழரின் வேணவாவையும், சமர்க்களத்தில் அவர்கள் புரியும் தீராத தியாகத்தையும், அதன்பின்னால் இருந்த நியாயத்தையும், அந்த நியாயத்தின் அடிப்படையில் நீதிகேட்கும் தமிழர் தம் தலைமையின் பெருமையையும் கூடப் பறைசாற்ற அவன் தவறவில்லை.

அதேசமயம், நம் இனம் மீது பேரினவாதம் புரியும் மனிதாபிமான மற்ற, கொடூர ஒடுக்குமுறையையும், அரக்கத்தனமான - மிலேச்சத்தனமான - வெறித்தனமான - இராணுவக்கொடூரங்களையும் உலகிற்குப் பகிரங்கப்படுத்தவும் அவன் பின்னிற்கவில்லை.

சமூகவிரோத செயல்களையும், காட்டிக்கொடுப்புக்களையும், காக்கை வன்னயர்களையும் மக்களிடம் காட்டிக்கொடுக்கவும் அவன் அஞ்சவில்லை. இனமானம்பேசி, அதற்கு இனாமாகத் தாம் பெற்றுக்கொண்ட பதவிக் கதிரைகளை தமது இரத்தத்தில் ஊறிய வியாபாரப் போக்கிற்குப் பயன்படுத்தும் போலி வேடதாரிகளின் முகத்திரையைக் கிழித்து உண்மைச் சொரூபத்தை அம்பலப்படுத்தவும் அவன் தவறவில்லை.

காலத்தால் அவன் ஆற்றிய இப்பணிக்காகக் காலக்கிரமத்தில் அவன் பெற்ற பரிசுகள் அநேகம். அவற்றில் பல - இடையூறுகள், இழப்புக்களை ஏற்படுத்தின. சில - பாராட்டுக்களாகவும் விருதுகளாகவும் கூட அமைந்தன.

ஆயுதக்குழுக்களின் அச்சுறுத்தல்கள், இந்தியப்படையின் நேரடித் தாக்குதல்கள் - நெருக்கடிகள் - மிரட்டல்கள், விமானப்படையின் நேரடி வான்வழிக் குண்டுவீச்சுத் தாக்குதல், பத்திரிகை அலுவலகம் சீல் வைப்பு, கல்லெறிகள், இடம்பெயர்வுகள், கைக்குண்டுத் தாக்குதல்கள், களப்பணியாளர்களுக்கெதிரான வன்முறைகள், அச்சுறுத்தல்கள் என்று பல தரப்பட்ட நெருக்கடிகளுக்கு அவன் முகம் கொடுக்க வேண்டியவனானான். இந்தக் கொடூரங்களின் போது அவனது ஊழியர்கள் சிலர் தம் முயிரை விலையாகக் கொடுக்க வேண்டியவர்களாயினர்; சிலர் தங்கள் அங்கங்களைப் பறிகொடுத்து ஊனமுற்றனர். வேறு சிலர் படுகாயமுற்று குடாநாட்டு வாழ்விலிருந்து தள்ளிநிற்க வேண்டியவர்களாயினர். மற்றும் சிலர் களப் பணி கருதி தமது அன்றாட வாழ்வை தலைமறைவாய் சுருக்க வேண்டியவர்களாயினர். நிர்வாகமோ சொல்லொணா அழுத்தங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியதாயிற்று. அநீதி மற்றும் அநாகரிகமான முறையில் மேற்கொள்ளப்பட்ட வழிமறிப்புகளைக் கூட எதிர்கொள்ள வேண்டி நேரிட்டது.

இவை தவிர, உதயனுக்கும் அதன் பணிப்பாளர்களுக்கும் எதிரான பொய்ப்பிரசாரம், புரட்டுப்பரப்புரை என்பன வேறு.

இவற்றுக்கு மத்தியில் உதயன் சளைக்காமல் - தலைநிமிர்ந்து - நிற்கிறான் என்றால் அதற்குக் காரணம் ஈழத்தமழரும் அவர்கள் தம் வழிகாட்டிகளும் தமது தனையனாக உதயனை வரித்து அவனை உயிரூட்டி, உரமூட்டி உவகையுடனும் வாஞ்சையுடனும் வாரி அணைத்துக் கொண்டதுதான்.

அத்தோடு, உதயனின் வாசகர்கள், விளம்பரதாரர்கள், ஊழியர்கள் தரும் சளைக்காத ஒத்துழைப்பும் சேர்ந்துகொள்ள உதயன் இங்கு நிகரின்றித் திகழ்கிறான்.

ஆயுத வழிப்போராட்டம் என்ற அக்கினிக் கடலில் குளித்து பரிசுத்தத்தோடு வெளிவந்திருக்கும் நமது இனம் இன்று - அமைதிக்காய் - சமாதான சகவாழ்வுக்காய் - கௌரவத்துடன் கூடிய உரிமைக்காய் - கரம் நீட்டி நிற்கின்றது.

இந்த வரலாற்றுத் திருப்புமுனையின் முக்கிய கட்டத்தில், கடந்த வருடம் உதயன் திடசங்கற்பம் பூண்டமை போன்று நீதி நிலைத்திட - நிம்மதி நிலவிட - உரிமைகிடைத்திட-அறியாமை அகன்றிட-அறிவு பிறந்திட - அமைதி ஓங்கிட - வளம் பெருகிட - வளர்ச்சி கிட்டிட - அன்பு துளிர்த்திட - சுபீட்சம் நிறைந்திட - அனைவரும் பற்றுறுதியுடன் உழைப்பதற்கு இணைந்திடுவோம்.



ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரங்களுக்கான ஆணையாளர் கிறிஸ் பெட்டன் நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைச் சந்தித்து கைலாகு கொடுத்த காட்சி.

# புலிகளின் நிலைப்பாடும் திட்டமும் இன்று தெளிவாக அறிவிக்கப்படும்

## பிரபா - பெட்டன் சந்திப்பின் பின் தமிழ்ச்செல்வன் நேற்று அறிவிப்பு

கிளிநொச்சி,நவம்பர்27

**தற்போதைய அரசியல் சூழ்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும், அவர்களின் எதிர்காலச் செயற்பாடுகள் பற்றிய திட்டங்களும் மாவீரர் தினமான இன்று, அதையொட்டி தனது மக்களுக்குத் தலைவர் பிரபாகரன் ஆற்றும் உரையில் விவரமாக விவரிக்கப்படும்.**

**விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இதனை நேற்று ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார்.**

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரங்களுக்கான ஆணையாளர் கிறிஸ் பெட்டனுக்கும் தலைவர் பிரபாகரனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை கிளிநொச்சியில் இடம்பெற்றது.

அச்சந்திப்பில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தபோதே தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு விசேட ஹெலிகொப்டர் மூலம் கிறிஸ் பெட்டன் கிளிநொச்சிக்கு வந்துசேர்ந்தார்.

அவருக்கும் தலைவர் வே.பிரபாகரனுக்கும் இடையில் காலை 10 மணிமுதல் சுமார் ஒன்றரை மணி நேரம் சந்திப்பு இடம்பெற்றது. பிரபாவுடன் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நிதித்துறைப் பொறுப்பாளர் செ.தமிழேந்தி, பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோர் பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பை அடுத்து கிளிநொச்சியில் உள்ள மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்குச் சென்ற கிறிஸ் பெட்டன், அங்கு கண்ணி அகற்றும் முறையைப் பார்வையிட்டார். நண்பகல் 12 மணிக்கு அவர் கொழும்புக்கு புறப்பட்டார்.

சந்திப்பின் பின் தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களுக்குத் தொிவித்ததாவது:-

இன்றைய (புதனன்று) சந்திப்பு

(02ஆம் பக்கம் பார்க்க)

# இன்று மாவீரர் தினம் குடாநாடு விழாக்கோலம்

யாழ்ப்பாணம்,நவ.27

தமிழர் தாயகப் பகுதிகள் எங்கும் இன்று மாவீரர் நாள் மிகுந்த உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஈழத் தமிழர்களின் தேசிய விழாவான மாவீரர் தினத்தை எழுச்சியுடன் சிறப்பாக கொண்டாடப்படுவதற்குரிய எல்லா ஏற்பாடுகளும் தமிழ் பிரதேசம் எங்கும் விரிவாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

குடாநாட்டில் இன்றைய மாவீரர் தினத்தை சிறப்பாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட மாவீரர் எழுச்சிநாள் ஏற்பாட்டுக்குழு மேற்கொண்டுள்ளது. வீதிகள் எங்கும் மாவீரர் தின அலங்காரங்கள் கண்ணைப்பறிக்கும் வகையில் அமைந்துள்ளன. அலங்காரப் பந்தல்கள், கொடிகள் அமைக்கப்பட்டு குடாநாடு விழாக் கோலம் பூண்டு காணப்படுகிறது. மாவீரர் துயிலும் இல்லங்களும் மிகச்சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

(16ஆம் பக்கம் பார்க்க)

# மிருசுவிலில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த 10 படையினர் சகதியில் மூழ்கி மரணம்!

யாழ்ப்பாணம்,நவ.17

நாகர்கோவில் பகுதியில் மிருசுவிலை அண்டிய வயல் பிரதேசத்தில் நேற்று மாலை பயிற்சியில் ஈடுபட்டிருந்த படையினர் பத்துப்பேர் சகதியில் மூழ்கி உயிரிழந்தனர். ஒருவர் ஆபத்தான நிலையில் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

இராணுவத்தினர் 64 பேர் அடங்கிய அணி ஒன்று அதிகாரிகளின் வழிநடத்தலின் கீழ் அப்பகுதி வயல் பிரதேசத்தில் இரு அணிகளாகப் பிரிந்து கடும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தவேளை இநதச் சம்பவம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீர் நிறைந்திருந்த வயல் பிரதேசத்தில் சகதிக்குள் இறங்கி முன்னேறிச்செல்லும் பயிற்சியில் இவர்கள் ஈடுபட்டிருந்த சமயம் அப்பகுதியில்

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் வெல்லும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு.-அம்பாறை மாவட்டங்களில் இன்று மாவீரர் இறுதி நிகழ்வுகள்

விடுதலைப் புலிகளின் மாவீரர் தின இறுதி நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன. மட்டக்களப்பு மாவட்ட பிரதான நிகழ்வு தரவை மாவீரர் துயிலும் இல்லத்திலும், அம்பாறை மாவட்ட பிரதான நிகழ்வு கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்திலும் நடைபெறும். இதனையொட்டி இவ்விரு மாவட்டங்களிலும் விசேட பஸ் சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் செல்லும் பொதுமக்களுக்கு அன்னதானங்களும் வழங்கப்படவுள்ளதாக மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் கேணல் கருணாவும், கஞ்சிகுடிச்சாறில் தளபதி ராமும், தாண்டியடியில் இ.கௌசல்யனும், மாவடி முன்மாதிரியில் பவானும், வாகரையில் தளபதி மார்க்கனும் இன்று மாலை 6.35இற்கு பொதுச்சுடரை ஏற்றவுள்ளனர்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு சமாதானத்தை வலியுறுத்தும் வாகனப் பேரணியொன்றும் வாழைச்சேனையிலிருந்து வாகரையைச் சென்றடைய இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.




மாதகல் பகுதியில் நேற்று நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வில் மாவீரர் லெப்டினன்ட் சுகியின் உருவப்படத்துக்கு அவரின் தந்தையார் அல்பிரேட் ஈகச்சுடர் ஏற்றுவதை முதல் படத்திலும் மாதகல் மீனவர் சக்கத்தின் செயலாளர் லூர்து அன்ரன் உரையாற்றுதையும் கடற்புலிகளின் அரசியல்துறை பிரமுகர் மலர்விழி உட்பட நிகழ்வில் கலந்துகொண்டோரை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படம் : மாதகல் செய்தியாளர்)*

# திருமலையில் மழைக்கு மத்தியில் புலிகளின் மாவீரர் தின நிகழ்வுகள்

திருகோணமலையில் நேற்று மழை பெய்துகொண்டிருந்த போதும் இரண்டாம் நாள் மாவீரர் தின நிகழ்வுகள் நடைபெற்றன.

காலை 9மணிக்கு தமிழீழத் தேசியக் கொடியை இந்து கலாசார மண்டபத்தில் கும்புலுப்பிட்டி அரசியல் துறைப் பொறுப்பாளர் சிவகுமார் ஏற்றினார். தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதி எஸ்.குமாரகுருபரன் ஈகச்சுடர் ஏற்றினார்.

முதல் மாவீரர் லெப்.சங்கர் மற்றும் லெப்.சீலன் ஆகியோரது உருவப்படங்களுக்கு மாவீரர்களின் பெற்றோர் சுடர் ஏற்றி, மலர் மாலைகள் சாத்தினர். தொடர்ந்து மலர் அஞ்சலியும், அகவணக்கமும் இடம்பெற்றன.

மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தென்னவன் தலைமை வகித்து உரை நிகழ்த்தினார்.

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் நேற்று வன்னி மற்றும் யாழ்ப்பாணம் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். ஏனையோர் இன்று சம்பூருக்கு அழைத்துச்செல்லப்படுவர்.

## கஞவாஞ்சிக்குடியில் 13 அடி உயர மெழுகுதிரி!

விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தை முன்னிட்டு களுவாஞ்சிக்குடியில் ஓட்டோ சங்கத்தினரால் 13 அடி உயரமான மெழுகுவர்த்தி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. பிரதான வீதிகள் சிவப்பு மஞ்சள், நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

மாவீரர்களின் நினைவாக நூற்றுக்கணக்கான தோரணங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மாவீரர் துயிலும இல்லங்களுக்கு அவர்களின் பெற்றோர்கள், பொதுமக்கள் சென்று அஞ்சலி செலுத்துகின்றனர்.

விசேட போக்குவரத்து ஒழுங்குடன் மாவீரர்களின் நூற்றுக்கணக்கான பெற்றோர்கள், மாவீரர் தினத்தில் கலந்துகொள்வதற்காக வன்னி சென்றுள்ளனர்.

## தலைவர் பிரபாவின் பிறந்த நாள்:

# இனிப்பு வகைகளைப் பரிமாறி குதூகலித்த பொதுமக்கள்

யாழ்ப்பாணம்,நவ.27

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 49ஆவது பிறந்த தினமான நேற்று குடாநாட்டு மக்கள் இனிப்புப் பண்டங்களைப் பரிமாறிக் கொண்டாடினர்.

தலைவர் பிரபாகரனுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் சுவரொட்டிகளும் ஆங்காங்கே ஒட்டப்பட்டிருந்தன.

நேற்றுக் காலை யாழ். பல்கலைககழக மாணவர்கள் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் வைத்து பொதுமக்களுக்கு இனிப்புக்களை வழங்கினர்.

தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளை ஒட்டி நல்லூர் கந்தசுவாமி ஆலயம் உட்பட பல கோயில்களில் நேற்று விசேட பூஜைகள் இடம்பெற்றன.

'புலிகளின் குரல்' வானொலியில் நேற்றுக் காலை 5.30 மணி முதல் 10.30மணிவரை தலைவரின் பிறந்த நாளை சிறப்பிக்கும் வகையில் சிறப்பு ஒலிபரப்பு இடம்பெற்றது.

பல நூற்றுக்கணக்கானோர் தொலைபேசி மூலமாகவும் அஞ்சல் வாயிலாகவும் தலைவர் பிரபாகரனுக்கு புலிகளின் குரல் ஊடாக பிறந்த நாள் வாழ்த்துக்களைக் கூறிமகிழ்ந்தனர்.

தலைவர் பிரபாகரனின் பிறந்த நாள் நினைவாக நேற்று யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஒரு தொகுதி மாணவர்கள் யாழ். போதனா வைத்திய சாலையில் இரத்ததானம் செய்தனர்.

வலிகாமத்தின் பல பகுதிகளிலும் தென்மராட்சி, வடமராட்சி ஆகிய இடங்களிலும் பொதுமக்கள் இனிப்புக்களை பரிமாறி தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளைக் கொண்டாடி மகிழ்ந்தனர் என்று எமது பிரதேச செய்தியாளர்கள் அறிவித்திருக்கின்றனர். (ஐ-4-5-86-173-17-117-70)

# திருகோணமலை சோனகத் தெருவுக்கு மேலதிக பொலீஸ், இராணுவ பாதுகாப்பு

## கைக்குண்டு வீச்சில் 6பேர் காயம்; அதையடுத்து தாக்குதல்கள்

திருமலை, சோனகத் தெருவில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த கைக்குண்டுத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து அப்பகுதிக்கு மேலதிக பொலீஸ், இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது. எனினும் பதற்றம் நிலவுகிறது.

நேற்றுக்காலை படைத்தரப்பினருக்கும் பள்ளிவாசல் தலைவர்களுக்குமிடையே பேச்சுக்கள் இடம்பெற்றன. தமக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் அதற்காக ஊர்காவல் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்படவேண்டும் என்றும் அப்பொழுது கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆயினும், அக்கோரிக்கையை படைத்தரப்பினர் நிராகரித்துள்ளனர்.

கைக்குண்டு வீச்சுச் சம்பவத்தைக் கண்டித்து நேற்றுக்காலை சோனகத் தெருவில் உள்ள முகைதீன் ஜும் ஆப் பள்ளிவாசல் முன்னிலையில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து பொலீஸ், இராணுவ அதிகாரிகள், முஸ்லிம் சமயப் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்களை ஸாஹிரா மகா வித்தியாலய பகுதிக்குச் சென்று சந்தித்து உரையாடினர். இந்தச் சந்திப்பின் போதே பள்ளிவாசல் மற்றும் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

இதேவேளை, அங்கு நிலைமையை அவதானிக்க நேற்றுக்காலை சென்ற மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களான மற்றி, மாக்கரட்டா ஆகியோர் அந்தோனியார் கோவிலடி சந்தியில் வைத்து ஒரு குழுவினரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். நீங்கள் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கூறியே இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் எனக் கூறப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 8.30மணியளவில் சோனகத் தெரு பள்ளிவாசலுக்கு சுமார் 50மீற்றர் தொலைவில் இனந்தெரியாதவர்களால் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டுள்ளது. இதனால் ஆறுபேர் சிறுகாயங்களுக்கு இலக்காகியுள்ளனர். காயமடைந்தவர்கள் திருகோணமலைப் பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

குண்டு வீச்சை அடுத்து அவ்வீதியால் சென்ற மூவர் தாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளார். இருவர் குண்டாந்தடிகளால் தாக்கப்பட்டுள்ளனர். இம்மூவரும் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, வயோதிபர் ஒருவர் தாக்கப்பட்டு அவரது துவிச்சக்கர வண்டியும் சேதப்படுத்தப்பட்டுள்ளது. அச்சகம் ஒன்றுக்குச் சொந்தமான வான் ஒன்றும் சேதப்படுத்தப்பட்டுள்ளது. மற்றுமொரு வான் சிறிது எரிக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை அவ்வீதியால் சென்ற நிலாவெளியைச் சேர்ந்த இருவர் தாக்கப்பட்டனர் எனக் கூறப்படுகின்றது.

மாவீரர் தினத்தைக் குழப்பும் நோக்குடன் விஷமிகளால் மேற்கொள்ளப்பட்ட செயல் இது என்றும் கோஷ்டி மோதலில் குண்டுவீசப்பட்டது என்றும் தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைத்து, மோதலைத் தூண்ட மேற்கொள்ளப்பட்ட செயல் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## பிரபாகரனின் 49ஆவது பிறந்த தினம்:

# விசேட பூஜை வழிபாடுகளுடன் மூதூர் கிழக்கில் கொண்டாட்டம்

மூதூர்,நவ.27

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 49ஆவது பிறந்ததினம் நேற்று மூதூர் கிழக்கில் கொண்டாடப்பட்டது. ஆலயங்களில் விசேட பூஜை, வழிபாடுகள் நடைபெற்றன. அவற்றில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

மாவீரர் தின பிரதான நிகழ்வு சேனையூர் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டிருக்கும் மாவீரர் நினைவாலயத்தில் நடைபெறுகின்றது.

மக்கள் வருகைதந்து மலரஞ்சலி செலுத்தி வருகின்றனர். விசேட பஸ் சேவைகளும் நடத்தப்படுகின்றன.

தம்பலகாமம், ஈச்சிலம்பற்று, கிளிவெட்டி, மல்லிகைத்தீவு, பட்டித்திடல் ஆகிய இடங்களிலிருந்து பெருந்திரளான மக்கள் சேனையூருக்குச் சென்றுள்ளனர். மாவீரர் நினைவுத்தூபி, பள்ளிக்குடியிருப்பில் திருகோணமலை மாவட்ட புலிகளின் கட்டளைத் தளபதி கேணல் பதுமனால் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட அரசியல்துறைப் பெறுப்பாளர் திலக் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# புலிகளின் நிலைப்பாடும் திட்டமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல பயன் உள்ளதாகவும் நம்பிக்கை தரக்கூடியதாகவும் அமைந்திருந்தது.

தென்னிலங்கை அரசியல் நெருக்கடிகளால் சமாதான முயற்சிகள் குழம்பியுள்ள இந்த நிலையில் எமது தரப்புக் கருத்துக்களை அறிவதில் அவர் ஆர்வமாக இருந்தார். இந்த அடிப்படையில் எமது அமைப்பின் நிலைப்பாட்டை தேசியத் தலைவர் விளக்கிக் கூறினார்.

சமாதான வழியில் - அமைதி முறையில் - பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கு எமது அமைப்பு எப்போதும் தயாராக இருக்கின்றது என்று தலைவர் எடுத்துக் கூறினார். இந்த விடயத்தில் எமது அமைப்பு உறுதியாக இருப்பதுடன் யுத்த நிறுத்த உடன்பாட்டைச் செம்மையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதில் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்றும் தலைவர் சுட்டிக்காட்டினார்.

✪ *கேள்வி:* பிரிட்டனில் புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும் என்று கோரினீர்களா?

★ *பதில்:* இல்லை. ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய தலைவர்கள் எம்மைத் தொடர்ந்து சந்தித்து வருகின்றார்கள். இதன்மூலம் எமது மக்கள்மீதுள்ள கரிசனையை அவர்கள் வெளிக்காட்டி வருகின்றனர். ஆகவே, தடை நீக்கம் குறித்து நாம் பேசவில்லை.

✪ *கேள்வி:* என்ன கோரிக்கையை நீங்கள் அவரிடம் முன்வைத்தீர்கள்?

★ *பதில்:* நாம் எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவில்லை. எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினோம். யுத்தநிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து 20 மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால், அந்த உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் ஏதும் நிறைவேற்றப்படவில்லை. மக்களுக்கு இயல்பு வாழ்க்கை இன்றும் ஏற்படவில்லை. இராணுவ நெருக்குவாரங்கள் குறையவில்லை. எந்த அபிவிருத்தியும் ஏற்படவில்லை.

இந்த யுத்தநிறுத்தத்தாலும், சமாதான முன்னெடுப்புகளாலும் அதிக நன்மை பெற்றது சிங்கள தேசமே. எமது பிரதேசத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று தலைவர் விளக்கமாக எடுத்துக் கூறினார்.

தெற்கு அரசியல் நெருக்கடியால், சமாதான முயற்சிகள் முறிவடைந்து யுத்தம் வெடிக்குமோ என்ற அச்சமே சர்வதேச சமூகத்திடம் உள்ளது. தெற்கு அரசியல் நெருக்கடிக்கு முடிவுகண்டு விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும். வன்முறை யுத்தம் ஏற்படாமல் அமைதி ஏற்படவேண்டும் என்பதையே சர்வதேச சமூகம் விரும்புகிறது.

ஜனாதிபதியைத் தாம் [illegible] என்று அவர் எம்மிடம் கூறினார். பேச்சுக்கள் மூலம் தீர்வு காணப்படவேண்டும் என்றும் சமாதான முயற்சிகள் தொடரவேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்திக் கூறினார் என்று அவர் எம்மிடம் குறிப்பிட்டார்.

எனினும், ஜனாதிபதி தற்போது எதிர்நோக்கியுள்ள அரசியல் நெருக்கடி குறித்து அவர் எதுவும் கூறவில்லை.

தென்னிலங்கை அரசியல் சூழலை நிதானமாக அவதானித்துக்கொண்டிருக்கிறோம். அதிகாரப் போட்டி முடிவுக்கு வந்து, தென்னிலங்கை அரசியலில் உறுதிப்பாடு ஏற்பட்டு, பேச்சுக்களை முன்னெடுக்கக்கூடிய சகல அதிகாரம் பொருந்திய அரசியல் தலைமை உருவாகும்வரை பொறுமையாக இருக்கிறோம் என்று அவரிடம் விளக்கிக் கூறினோம்.

நாளை மாவீரர் நாள். எமது தலைவரின் மிக முக்கியமான கொள்கை விளக்க உரை இடம்பெறவிருக்கிறது. அதில் எமது நிலைப்பாடுகள் தெளிவாக முன்வைக்கப்படும்.

இன்றைய அரசியல் நிலைப்பாடுகள், எதிர்கால அரசியல் செயற்பாடுகள் தொடர்பான விளக்கங்களை அந்த உரையில் தலைவர் நிச்சயம் முன்வைப்பார் என நம்புகிறேன்.

யுத்தநிறுத்தம் செம்மையாக [illegible] வேண்டும் என்பதுதான் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாடாகும். அந்தச் செய்தியை சகல தரப்புக்கும் அவர்கள் சொல்கிறார்கள். அந்த வகையில் எமது தேசியத் தலைவரிடம் அதனைத் தெரிவித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு புனரமைப்பில் ஐரோப்பிய ஒன்றியம் மிக ஆர்வமாக இருக்கின்றது. அதற்கான சூழல் அமையவில்லை என்பதே அவர்களின் கவலைக்கு காரணம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது தாயகப் பிரதேசத்தைப் புனரமைக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள். தென்னிலங்கை அரசியல் அதை இடைநிறுத்தியுள்ளது.

சமாதான முயற்சிகள் தொடரப்படவேண்டும். அதற்கு புலிகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என அவர் எம்மிடம் கேட்டார். எமது தலைவர் அதற்கு நல்ல விளக்கத்தை அளித்தார்.

"இது எமது கைகளில் இல்லை. தென்னிலங்கையில் உள்ள அதிகார மையங்களின் கைகளிலேயே இது தற்போது தங்கியுள்ளது. இடைக்கால நிர்வாக வரைவை முன்வைத்துள்ளோம். பேச்சுக்குத் தயார் என அறிவித்துள்ளோம்" என்று தலைவர் கூறினார்.

ஜனாதிபதியுடன் நாம் பேச்சு நடத்துவது தொடர்பாக பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

அவர் எவ்வளவு தூரம் சமாதான முயற்சிகளிலும் பேச்சு நடவடிக்கைகளிலும் உறுதிப்பாடாக இருக்கின்றார் என்பதைப் பொறுத்தே எதிர்காலத்தில் - சமயம்வரும்போது- இவ்விடயம் குறித்து உரிய முடிவு எடுக்கப்படும் என்பதை கூறிவைக்க விரும்புகிறேன்.

தெற்கில் இனவாதிகளின் நடவடிக்கைகள் தொடர்கின்றன. இந்தத்தடவை சர்வதேச சமூகத்துக்கே தமது செயற்பாடு எத்தகையது என்பதை அவர்கள் வெளிக்காட்டியுள்ளனர் என்றார் தமிழ்ச்செல்வன்.

இலங்கை விடயங்களை அடுத்து இந்தியாவின் படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டிருப்பது குறித்துக் கேட்டபோது -

"ஒரு நாட்டின் கொள்கை வகுப்பை இராணுவம் முடிவு செய்வதில்லை கொள்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்துவது அந்த நாட்டு அரசே இதுகுறித்து உத்தியோகபூர்வமான தகவல் ஏதும் எமக்குக் கிடைக்கவில்லை. தங்கள் இராணுவத்தை உஷார் நிலையில் வைத்திருப்பது அந்தந்த நாட்டின் உரிமை. எமது விடயத்தில் அவர்கள் தலையீடு செய்யாத நிலையில் அது குறித்த நான் கருத்துக் கூறுவது பொருத்தமற்றது எனக் கருதுகிறேன்"- இப்படி சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனத்த இரவும் கார்த்திகை தீபங்களும்

மீண்டுமொரு கார்த்திகையில் மேகம் வியர்த்திருக்கும்
சீண்டுகின்ற காற்றோ சிணுங்கியழும் - நீண்டபனிப்
போர்வையினை மூடிப் புரண்டாலும் எம்ஊரின்
வேர்களுக்குள் காயும் வெயில்.

தீபங்கள் ஆயிரமாய்த் தேம்பும் எமைப்பிடித்த
சாபங்கள் வெந்ததற்குச் சாட்சி சொலும் - வேகுகடல்
சூரியனைத் துப்பித்தன் சூடாற்ற ராவிடியும்
மாரிநிலம் ஆகும் மனம்.

கந்தக மூச்சாலே காயமுற்ற எம்காற்று
புண்களினை ஆற்றியின்று புன்னகைக்கும் - குண்டுகளால்
சாவோலை தந்த சமருறங்கக் கண்டதனால்
பாவோலை நீட்டும் பனை.

கண்ணீர் விழுந்தே கடல்சூழ்ந்த எம்மூரில்
பன்னீர் தெளிக்கும் பனங்கீற்று - மண்ணுக்காய்
எல்லையிலே பூத்து எரியுண்ட பூவரசின்
நல்லதணற் பூக்கள் நனைந்து.

போருக்கு அஞ்சிப் புறதேசம் போனவர்கள்
தேருக்கு வந்து திரும்புகிறார் - ஊருக்குள்
நேர்வந்த காலனவன் நெஞ்சில் உதைத்தவரோ
பாருக்குள் ஆனார் பதி.


- ச.முகுந்தன் .



# மாவீரர்க்கு அஞ்சலி

மண்ணின் மைந்தர்களாய்
மனமொன்றி மண்மீட்கத்
திண்ணமாய் நின்றுயிரைத்
தியாகமாய்(த்) தந்திட்டு,
விண்ணில் இருந்தீழ
விடுதலையை நோக்கிநிதம்
எண்ணி எக்களிக்கும்
எங்கள்மா வீரர்களே!
உண்மை வெளிப்பட்டு
உலகுஉங்கள் உணர்வுகளின்
தன்மை தலைக்கொண்டு
தனித்துவமாய் எமக்கென்றோர்
வண்ணத் தமிழீழ
வார்ப்புவளம் பெற்றோங்க(க்)
கண்ணில் ஒற்றியுங்கள்
கழல்களிலே மலர்சொரிவோம்

- நயினைக்கவிஞர்
நாக.சண்முகநாதபிள்ளை.




# வீரரின் நினைவலைகள்

விடுதலையை எதிர் நோக்கி
வீர மரணம் தனைத் தழுவி
விழுதுகள் போல் வேரூன்றிய
வீரப் பெரு மன்னர்களே!
உம்நினைவலைகள் நிலைத்திருக்க
காரணம் தான் ஒன்றல்ல.
மண்ணினது சொந்தம் கேட்டு
மாண்டு நீர் போனாலும்
மனங்கள் பல உம்மாண்பை
மதித்துவரும் நாள்களும் பல.
உம் எண்ணக் கனவுகள்
நிலைத்திடும்நாள் வரவேண்டும்
எம்மண்ணிலே எம்பாதம்
சுதந்திரத்தை பதிக்கவேண்டும்
மாவீரர் உம் கதைக்கு
விடிவு இனி கிட்டவேண்டும்.

அல்லாரையூர் செ.சிபி.

# நாளைய நட்சத்திரங்களே!

ஓ மாவீரர்களே!
"உங்கள் வீரம் விதைத்தமண்"
இன்னும் வீரமுடன் தான்....
உம்வீரக் கனவுகள்
இன்னுமெம் நினைவோடுதான்...
உங்கள் தாகம் - அது
இன்னும் எங்களிற்குமே.....



விரைகின்றோம் - உம்
உறையுமில்லங்களிற்கு
வணங்குகின்றோம்,
கண்ணீரால் உமை
உயிர்ப்பிக்கின்றோம்...
சுடரேற்றிப் பணிகின்றோம்
காவல் தெய்வங்களாய்...
நாளை ஈழமண்ணில்
மின்னும் நட்சத்திரங்கள் நீங்கள்.

-சிவப்பிரியன்-



# உங்களையே காண்கிறோம்...

ஆனையளவு தடையாய்நின்ற ஆனையிறவு
பூனையளவு தடையுமற்று
புலி இறகுகட்டிப் பறக்கும்
புதுவெளியில் வீரருமையே காண்கிறோம்...

நெருப்புக் கம்பளம் விரிக்கப்பட்ட
கட்டுநாயக்காவில் விரிந்த
செங்கம்பளம் எங்கும்
மாவீரருமையே காண்கிறோம்...

தாய்லாந்து தொட்டு - எம்மவர்
ஜப்பான்வரை புலி முத்திரையிட்ட
மெயில்களாய் பறக்கும் பயணமதில்
மாவீரர் உம்மையே பார்க்கிறோம்...

வட்டமிட்டு குத்தி
எம்மீது குண்டடித்தோர் - இன்று
எமையே பத்திரமாய் ஏற்றியிறக்கும்
வானூர்தியிலும் உமையே காண்கிறோம்...

ஏ நைனின் தொண்டையில் வளர்ந்த
புற்றுநோயை பத்திரமாய் வெட்டி
பாதைசமைத்த சூனியப் பிரதேசமெங்கும்
மாவீரர் உம்முகங்கள் காண்கிறோம்......

சி.உதரன்.

# மாவீரர்களே....

வீரர்களே....
நீங்கள் மரணித்ததில்லை
தமிழன்னை கருவதில்
வளர்கின்றீர்கள் - நாளை
தமிழன்னை மடியில் நீங்களே
தாலாட்டப் பாடுவீர்கள்....
"நீங்கள் சிந்திய குருதிமட்டும்"
இன்னுமிந்த மண்ணில்
உயிருடன் தான்....
நாளையது
"தமிழன்னை உயிர்ப்புக்கு
இரத்த தானமாய்....
நீங்கள் பிடித்த துப்பாக்கி
இன்னும் துடிப்புடன்தான்
"அது உங்களை மீட்கும்"
நீங்கள் நடந்த கால்த்தடம்
இன்னும் புனிதமாயே
"அதிலுங்கள் விழிகள் இருக்கும்"

ரி.சிவானி

# சிவப்பு சூரியன்களே

சாவுக்கு நாள் குறித்து ~ எம்
விடிவுக்கு விளக்கேற்றிய
சிவப்பு சூரியன்களே!
கார்த்திகை ~ 27 கார்மேகம்
சூழ்ந்திருக்க பாரெல்லாம்
உம் நாமம் உணர்வுடனே
நினைவு கூர்ந்திட அழியாத
கோலங்களின் கோயில்
நாடி வந்து அஞ்சலிகள்
செய்திடுவோம் ~ நீவீர்
வீழ்ந்த பாதையெல்லாம் ~ எம்
பயணம் தொடருமென்று
உறுதியும் பூண்டிடுவோம்!

எஸ்.கவிதரன்.






# மாவீரர் நாள் கார்த்திகையில் மட்டும் தானா?

ஈழத்தை மீட்பதற்காக
இன்னுயிரை ஈந்தவர்கள்
மண்பற்றுக் காரணத்தால்
மரணித்த பின்னும் இன்று
மண்ணினுள் வாழ்பவர்கள்
காலத்தை மாற்றியதால்– புதுக்
காவியத்தை படைத்தவர்கள்
விடுதலைக் கதவைத் திறக்க
'வீர காவியம்' ஆனவர்கள்
'உரிமை'களை வென்றெடுக்க
'உறவு'களைப் பிரிந்தவர்கள்
'சுதந்திரத்தைப்' பெற்றுத்தர– தம்
சுகங்களை மறந்தவர்கள்
அந்நியர் எமை
அடக்க நினைக்கையில்
'மரண வாசல்' துறந்தவர்கள்
மாவீரர் நாள் நமக்கு
கார்த்திகையில் மட்டும்தானா?–இல்லை

ஆண்டாண்டு காலமதாய்
'ஆண்ட மண்' மீட்கும்வரை!
இழந்து நிற்கும் 'உரிமை'களை
இறக்கு முன் காணும் வரை!
பறிகொடுத்த 'சுதந்திரத்தை'
பூரணமாய் மீட்கும் வரை!
சொந்த வீட்டு முற்றத்துக்கு
செல்லும் நாள் கிட்டும் வரை!
கடந்து சென்ற பாதைதனில்
கண்டு வந்த இன்னலோடு
ஈழம் ஒன்றை காணும் வரை
மாவீரர் நினைவுகள்– எம்
கனவுகளில் சங்கமிக்கட்டும்...

- அமுது குருவூர்

# வீரத்தின் வரையறை!

வானமொருமுறை ஆடட்டும்; வந்துகார்முகில் கூடட்டும்
மானமறவரின் தானைபோலிடி மலர்ந்துபேரொலி போடட்டும்।
சூழுமாழியே பொங்கிவிடு; சுழலுமூழியே தங்கிவிடு
ஆழமண்ணதில் வாழும்புலிகளின் ஆன்மநோன்பதைப் பொங்கவிடு।
மூளுமக்கினி மூச்சுவெம்மையில் முன்னெழுந்தபகை மாய்ந்ததே,
வீழும்பொழுதிலும் வாழும்விருட்சமாய் வித்தென உடல்சாய்ந்ததே।
ஊனமாயெமது தேசம்போகுமோ? உணர்விழந்ததாய் தமிழுமாகுமா?
ஆனபொழுதெலாம் காத்தவீரரின் அரணைத்தாண்டியோர் அழிவுநேருமா?

வெடியெடுத்தொரு படகுபோகையில் வெண்ணிலாவதன் கண்கூசும்,
குடிகெடுத்த பெரு கப்பல்பொடிபட குளிர்ந்தநல்லொளி அதுவீசும்।
அங்கமெங்கிலும் குண்டுதாங்கினும் அடங்குமாஇவர் பெருவீரம்?
தங்கிநின்றிடா(து) எதிரிஓடிடத் தணியுமேஇவர் உடல்ஈரம்।
மங்குமாதமிழ்த் தாயின் மாண்பென (நச்சு) மாலைசூடினார் புலிவீரர்,
பொங்குதமிழதன் சங்கு ஆகியே பூத்து வாழ்கிறார் மாவீரர்.
முடிவெடுத்தொரு பாதைபோட்டனம்,முள்ளிலே மலர்கள் வீழ்ந்தன।
விடிவுதி[illegible]துயிலாழ்ந்தன।

- அனலையூர்ச் சேந்தன்.



# போற்றப்பட வேண்டியவர்கள்

மாவீரர்கள் என்றும்
போற்றப்பட வேண்டியவர்கள்!
அவர்களின் தியாகங்கள்
மதிக்கப்படவேண்டியவை!
தியாகத்தின் உருவாக
அவர்கள் உறங்கும்
கல்லறைகள்!
கல்லறைகள் அல்ல...
வீரத்தமிழ்த் தாயின்
கருவறைகள்!
தமிழ்த்தாயின் விலங்கினை
உடைத்தெறிய
யுத்த வேள்வியிலே
ஆகுதி ஆகியவர்கள்!
போரெனும் கொடும்
புயலினால் வேரோடு
சாய்க்கப்பட்டவர்கள்!
ஆனாலும் அவர்கள்
வீழ்ந்து விடவில்லை!
விதையாக மண்ணில்
விதைக்கப்பட்டவர்கள்!
நாளை மீண்டும்
விருட்சமாவார்கள்!
தமிழீழத்தின் விடியலை
தம் கரங்களினால்
வரவேற்பார்கள்!
தமிழ்த்தாயின் விடியலுக்கு
உயிரீந்த மாவீரர்கள்
போற்றப்பட வேண்டியவர்கள்!
அவர்களின் தியாகங்கள்
மதிக்கப்பட வேண்டியவை!

க.புஸ்பாஞ்சலீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறந்த முதலீட்டுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம்

# செலான் வங்கி

## தொகுதிக்கடன்கள்

## 2003/2008

# வழங்கல் ஆரம்பம் 2003 நவம்பர் 28

வாழ்க்கையின் ஏனைய விடயங்களைப் போலவே முதலீடுகளும் நன்கு பேணிப் பராமரிக்கப்பட வேண்டும். நீங்கள் பாடுபட்டுச் சம்பாதித்த பணம் பாதுகாப்பாகப் பெருகுவதற்குச் சரியான சூழல் அவசியம். செலான் வங்கியின் தொகுதிக்கடன்கள் உங்கள் முதலீட்டுக்குச் சிறந்த வருமானத்தை மட்டுமன்றி, பாதுகாப்பு உத்தரவாதத்தையும் தரும்.

- முதலீட்டுக் காலம் 5 வருடங்கள். மூன்று வகையான வட்டித் திட்டங்கள்.
- வட்டி வழங்கல் மாதாந்தமெனின் ஆண்டுக்கு 9% வட்டி.*
- வட்டி வழங்கல் வருடாந்தமெனின் ஆண்டுக்கு 10% வட்டி.
- மிதப்பு வட்டி வீதமெனின் ஒரு வருடகால திறைசேரி உண்டியல்களுக்கான ஒக்டோபர் மாதச் சராசரியைவிட 2% கூடுதலான வட்டி. (ஆகக்குறைந்தது 6% ஆகக்கூடியது 12%)

இந்த வழங்கல் ஒரு பில்லியன் ரூபாவுக்கானது. மிகையாகச் செலுத்தப்படுமிடத்து, இவ் வழங்கல் மேலும் ரூ.500 மில்லியனால் அதிகரிக்கப்படும்.

இந்த அரிய வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்.
செலான் தொகுதிக்கடன் வழங்கல் பற்றி மேலும் அறிய நாடெங்குமுள்ள 108 செலான் கிளைகளிலும் கிடைக்கும் விபரமஞ்சரியைப் பார்க்கவும்.

விரையுங்கள்! இப்போதே அழையுங்கள் 2456924.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வருடாந்த விளைவு வீதம் 9.38%
இரண்டாவது பலகை நிரற்படுத்தல்

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

தலைமையகம்: செலிங்கோ செலான் டவர்ஸ், 90 காலி வீதி, கொழும்பு 3.
தொ.பே: 245 6789, 4701000, ஃபெக்ஸ்: 245 6456, ஈ-மெயில்: info@seylan.lk

www.jwt.lk

உதயன்

## எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் இன்றைய மாவீரர் தின உரை

இன்று மாவீரர் நாள். ஈகத்தில் இமயத்தின் சிகரங்களைத் தொட்ட உயர்வேங்கைகளை நினைவுகூரும் நாள்.

"உலகில் அநீதியும் அடக்குமுறையும் தொடரும் வரை விடுதலைப்போராட்டங்களும் தொடரும். ஒடுக்கப்படும் மானிடத்தின் விடுதலையை நோக்கிய பயணமாகவே மனித வரலாறு நகர்கின்றது. ஒடுக்கப்பட்ட சமுதாயத்திலிருந்தே வரலாறு படைக்கும் சக்திபெற்ற அபூர்வ மனிதர்கள் தோற்றம் பெறுகின்றார்கள். எமது சமூகத்தில் பிறந்த அந்த அபூர்வ மனிதர்கள்தாம் எமது மாவீரர்கள்" - என்று தலைவர் பிரபாகரன் ஒரு தடவை கூறியிருந்தார்.

ஈழத்தமிழ் மக்களின் வாழ்வோடும் வரலாற்றோடும் விடுதலைக் குரலோடும் ஒன்றிப்போனவர்கள் விடுதலைப் புலிகள். இன்று ஈழத்தமிழரின் தலைவிதியை நிர்ணயிக்கும் ஏகபிரதிநிதிகளாகவும் சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட உயர்நிலையில் விடுதலைப் போராளிகள் இருக்கின்றார்கள். அந்த விடுதலை இயககத்தின் வருடாந்த கொள்கை விளக்க உரையைத் தலைவர் பிரபாகரன் இன்று மாலை நிகழ்த்த இருக்கின்றார்.

இலங்கை அரசியலை உன்னிப்பாக நோக்கும் சர்வதேசமுமே இன்று அவரது உரையின் ஆழத்தை - அர்த்தத்தை - அறிந்து கொள்வதற்காக வழமை போலக் காத்திருக்கின்றது.

இவ்வருடம் புதியதோர் அரசியல் சூழ்நிலையில் - பரிமாணத்தில் - தலைவர் பிரபாகரனின் உரை நிகழ்த்தப்படவிருக்கின்றது.

ஈழத்தமிழர்களின் விடுதலைக்காக - நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்வதற்காக - கௌரவமான வாழ்வையும் சமவுரிமையையும் அவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக - நமது முன்னைய தலைவர்கள் சாம, பேத, தான முறைகளைக் கையாண்டு தோற்றுப்போனார்கள். இதன்பின்னர்தான் தலைவர் பிரபாகரன், தண்டவழியை - போர் முறையை - தேர்ந்தெடுத்து நடைமுறைப்படுத்தினார்.

இப்போது அந்தத் தண்டவழியில் ஒரு தடை - அமைதி முறையில் - சமாதான வழியில் - பேச்சுமூலம் - இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு ஒரு வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், கொடுத்த வாய்ப்பைக் கெடுத்துவிட்டு நிற்கின்றது இலங்கைத் தரப்பு. தென்னிலங்கை அரசியல் தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட அரசியல் நெருக்கடி - முறுகல் நிலை - முழு சமாதான முயற்சிகளையுமே கேள்விக்குள்ளாக்கி அந்தரத்தில் நிறுத்தியிருக்கின்றது.

இந்தப் பின்னணியில் புலிகளின் நிலைப்பாடு, எதிர்பார்ப்பு, எதிர்காலத்திட்டம் என்பவற்றை தலைவர் பிரபாகரனின் இன்றைய மாவீரர் தின உரை கோடிட்டுக் காட்டும் எனப் பலரும் எதிர்பார்க்கின்றார்கள்.

கடந்த மே மாதம் கொழும்பில் நடந்த உலக இந்து மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கை நிலைமையை மகாபாரதத்துடன் ஒப்பிட்டிருந்தார். அதுதான் இன்று இங்கு நடக்கின்றது.

எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான கௌரவர்கள், எண்ணிக்கையில் சிறுபான்மையினரான பாண்டவர்களின் உரிமைகளை அடாத்தாகப் பறித்து வைத்துக்கொண்டு ஆட்சிபுரிந்தனர். பஞ்சபாண்டவர்கள் தமது நாட்டுரிமையைக் கேட்டார்கள்; கிடைக்கவில்லை. ஐந்து நகரங்களைக் கேட்டார்கள்; அதுவும் மறுக்கப்பட்டது. ஐந்து வீடாவது தரும்படி கேட்டார்கள்; அதற்கும் பலனில்லை. வேறு வழியின்றி போர் புரிந்து உரியதை முழுவதுமாக மீட்டார்கள் பாண்டவர்கள்.

இன்று இங்கு சிறுபான்மையினரான தமிழர்கள் தங்களின் அடிப்படை அபிலாஷைகளையாவது தீர்க்கும்படி கோரி நிற்கின்றார்கள். ஆனால், சிங்களத் தலைமையோ இரண்டாகப் பிரிந்து நின்று போக்குக் காட்டுகின்றது. காலங்காலமாகத் தமிழர்களின் அடிப்படை உரிமைகளை அவர்களுக்குக் கிடைக்கவிடாமல் மறுக்கச் செய்வதற்கு ஏதேனும் தந்திரங்களைப் பண்ணுவது தென்னிலங்கை அரசியலின் யுக்தி மிகுந்த போக்கில் வழமைதான். அந்த வகையில் ஜனாதிபதி - பிரதமர் இடையே பிளவு - அதிகாரப் போட்டி - அரசியல் நெருக்கடி என்கின்ற புதிய தந்திரோபாயம் பின்பற்றப்பட்டிருக்கின்றது.

இதை அம்பலப்படுத்துவதாகவும், அதற்குப் பதிலடியாகத் தமிழர் தரப்பு எடுக்க முற்படும் உத்தியை மேலோட்டமாக வெளிப்படுத்துவதாகவும் தலைவர் பிரபாவின் இன்றைய உரை அமையும் என எதிர்பார்க்கலாம்.

சமாதான முயற்சிகளில் சர்வதேசப் பங்களிப்பு அதிகரித்துள்ள இன்றைய நிலையில், தென்னிலங்கை அரசியலின் உண்மைச் சொருபத்தை சர்வதேச உலகுக்குத் தோலுரித்துக் காட்டும் வகையிலும் தலைவர் பிரபாவின் உரை அமையும் என எதிர்பார்க்கலாம்.

## காலத்தின் பதிவு



சுதந்திரத்தின் விலை... படம்: தீபன்

# துயிலும் இல்லங்களில் அணிதிரண்டு அபிலாஷைகளை எடுத்தியம்புவோம்!

### அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் அறைகூவல்

யாழ்ப்பாணம்,நவ.27

மாவீரர் நாளில் துயிலும் இல்லங்களில் ஒன்றுகூடி எமது அபிலாஷைகளை சிங்கள தேசத்துக்கும், சர்வதேச சமூகத்துக்கும் எடுத்தியம்புவோம்.

- இவ்வாறு அறைகூவல் விடுத்தார் யாழ். மாவட்ட அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் செம்மணன்.

மாவீரர் தின நிகழ்வுகள் தொடர்பான செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பணிமனையில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டிலேயே துணைப் பொறுப்பாளர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மண்ணின் விடுதலைக்காக வீரச்சாவைத் தழுவிக்கொண்ட பல்லாயிரக்கணக்கான மாவீரர்களை மனதில் நிறுத்திப் பூசிப்பதற்கு தமிழர் தாயகம் தயாராகியுள்ளது. ஆனால், எமது மண்ணை ஆக்கிரமித்துள்ள படையினர் மாவீரர் நாள் நிகழ்வுகளைத் தடுக்கும் வகையில் பல்வேறு முட்டுக்கட்டைகளையும், தடைகளையும் ஏற்படுத்தி வருகின்றனர். அவர்களுடைய அச்சுறுத்தல்களுக்கும் மிரட்டல்களுக்கும் அடிபணியாது எமது மக்கள் எழுச்சியுடன் மாவீரர் நாளுக்குரிய வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

எமது விடுதலைப் போராட்டத்தை பொறுத்தவரையில் ஆயுதம் தாங்கிய படையினரால் ஏற்படுத்தப்பட்ட தடைகள் ஒன்றும் புதியவையல்ல. காலத்திற்குக்காலம் பல்வேறுபட்ட வடிவங்களில் எமக்கு இந்தத் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. அப்போது அவற்றை எல்லாம் முறியடித்து நாம் வெற்றியும் கண்டோம்.

இம்முறையும் மாவீரர் நாள் நிகழ்வுகளை உணர்வுபூர்வமாக அனுட்டிப்பதற்கு வேண்டியவகையில் அதற்கு வேண்டிய செயற்பாடுகளைச் செய்தபோது அவற்றைப் படையினர் தடுத்தனர். இது தொடர்பாக கடந்த 20 ஆம் திகதி எமது அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கனுக்கும் மற்றும் இராணுவ உயர்மட்ட அதிகாரிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் விசேட சந்திப்பு இடம்பெற்றது. அங்கு மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்பும் வகையில் படையினர் செயற்படமாட்டார்கள் என படைத்தரப்பால் வாக்குறுதி அளிக்கப்பட்டது.

ஆனால், அவற்றை மீறும் வகையில் படையினர் பின்னர் செயற்பட்டனர். இது எமக்கு மிகுந்த வேதனையையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. எம்மால் செய்யமுடியாதவற்றை செய்யுமாறு படைத்தரப்பு திணித்து வருகிறது.

மண்ணின் விடுதலைக்காக உயிர்துறந்த மாவீரர்களை நினைவு கூருவது ஒரு ஜனநாயக நடவடிக்கையாகும். அதனை எமது மக்கள் ஜனநாயக ரீதியில் மேற்கொள்வதனைத் தடுப்பது மனித உரிமை மீறல் ஆகும்.

இன்றைய மாவீரர் நாள் இறுதி நிகழ்வில் அனைத்து மக்களும் எழுச்சி கொண்டு அணிதிரண்டு மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு செல்லவேண்டும். நாம் தேசிய உணர்வு கொண்டு எழுச்சிபெற்று ஒன்றுபட்டுப் பலமாகவுள்ளோம். அதனை சிங்கள அரசிற்கும் சர்வதேசத்திற்கும் எடுத்துக்காட்டுவோம்.

- இப்படி செம்மணன் தெரிவித்தார். (ஜ-5-9-86)

# நகரின் சுகாதாரம், அபிவிருத்தி பற்றி மாநகர ஆணையாளருடன் சந்திப்பு

### வணிகர் கழகப் பிரதிநிதிகள் நடத்தினர்

யாழ்ப்பாணம்,நவ.27

யாழ். நவீன சந்தை மற்றும் மாநகரசபைப் பகுதிகளில் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வேலைகள் - அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி யாழ். வணிகர் கழகப் பிரதிநிதிகள் யாழ். மாநகரசபையினருடன் கலந்துரையாடியுள்ளனர்.

அத்துடன், உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டிய திட்டங்கள் பற்றிய பட்டியலையும் மேற்படி கழகப்பிரதிநிதிகள் மாநகர ஆணையாளரிடம் நேரில் கையளித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை மாநகரசபை ஆணையாளர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் மற்றும் சபையின் உயரதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

யாழ். நவீன சந்தை மற்றும் மாநகரசபைப் பகுதிகளில் உள்ள கடைகள், பொது இடங்கள் என்பவற்றில் சுகாதார நடைமுறைகளைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் -

நகரில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படாது இருக்கும் பொருட்டு பலத்த சேதமடைந்த நிலையில காணப்படும் வீதிகளை உடனடியாகப் புனரமைத்தல் வேண்டும் என்றும் இந்தச்சந்திப்பில் கலந்துகொண்ட வணிகர் கழகப் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

இதற்குப் பதிலளித்த ஆணையாளர், யாழ். நகரப் பகுதியின் சுகாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு பல திட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்தவுள்ளோம். சில திட்டங்களை அடுத்த வருடமுற்பகுதியில் செயற்படுத்த ஏற்பாடு செய்துள்ளோம் - என்றார். (எ-7)

**நாளை**

கார்த்திகை 12
வெள்ளிக்கிழமை
(28.11.2003)
திதி : பஞ்சமி
முன்னிரவு 7.00 வரை
நட்சத்திரம்:உத்தராடம்
பிற்பகல் 3.58 வரை
சுபநேரம்:6.13 - 7.43
ராகுகாலம்:10.43 - 12.13
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத் [illegible] கள். தேச விடுதலையின் ஆன்மீக அறைகூவலாகவே மாவீரர்களின் மரணம் நிகழ்கிறது. வே. பிரபாகரன்.

# சுயவிருப்பில் ஓய்வுபெறும் திட்டம்: பிரதி நிதியமைச்சர் புதிய தகவல்

கொழும்பு,நவ.27

வரவு - செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட அரச ஊழியர்கள் சுயவிருப்புடன் ஓய்வுபெறும் யோசனையானது சுகாதரா சேவைக்கும், ஆசிரியர் சேவைக்கும் பொருந்தாது எனப் பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இந்தத்துறைகளின் சேவைகளைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்காக நிதி அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது என்றும் -

தாதிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் வெற்றிடங்கள் இருக்குமானால் அந்தத் துறைகளில் இந்தச் சுற்றறிக்கைகளை நடைமுறைப்படுத்தமாட்டோம் என்றும் -

அமைச்சரவை தீர்மானத்தின்படி சம்பள உயர்வு தொடர்பான முடிவை எடுப்பதற்கு நியமிக்கப்பட்ட நிபுணத்துவக்குழு மேற்கொண்ட ஆய்வுகளுக்கமைய, திணைக்களங்களிலும் கூட்டுததாபனங்களிலும் மேலதிகமாக ஊழியர்கள் இருக்கும் இடங்களை அடையாளங்கண்டு, அவர்களுக்கு சுயவிருப்பத்தில் ஓய்வு பெறுவதற்கான சுற்றறிக்கையை நாம் வெளியிட்டுள்ளோம் என்றும் - பிரதி நிதியமைச்சர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'உதயன்' சமர்த்தன்

மக்கள் தொடர்பு சாதனங்களில் தற்போது சிறப்புடன் திகழ்வது நாளேடுகளே!

அந்த வரிசையில் யாழ்ப்பாணத்தில் அச்சாகி வெளிவரும் உதயனுக்கு இன்று பிறந்தநாள்.

இன்று 'உதயன்' பத்திரிகை தனது 18ஆவது அகவையினைப் பூர்த்திசெய்து 19ஆவது ஆண்டில் காலடி எடுத்துவைப்பதனையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம் ; உள்ளம் இறுமபூ தெய்துகின்றோம்.

யாழ்ப்பாண மக்களின் மனதினில் ஆழக் கால் பதித்து சமூகப் பொறுப்புணர்வோடு பத்திரிகா தர்மத்தையும் அதன் ஆனமநேய செயற்பாடுகளையும் இறுகப்பற்றி சேவையாற்றி வரும் 'உதயன்' தனது பதினெட்டு வருட கால வரலாற்றில் தமிழ்மக்களுக்காற்றிய பணி மகத்தானது.

பல்வேறுபட்ட, பலவிதமான மனநிலைகளையும் பலவிதமான சுவையினையும் கொண்டுள்ளோர்க்கு அவரவர்க்குத் தேவையானவற்றை சுடச்சுடத்தருவதில் 'உதயன்' என்றும் பின்னின்றதில்லை என்பது கண்கூடு.

நடுவுநிலை தவறாமல் உடனுக்குடன் செய்திகளை உண்மையாக வழங்குவதே உதயனின் பணி. நாட்டுமக்களின் தேவையை உணர்ந்து செயற்படுவதில் 'உதயன்' சமர்த்தன்.

தமிழ் மக்களின் உரிமைப்போருக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கிவரும் அதேநேரம், தமிழுக்கும் சமய கலாசார நெறிகளுக்கும் உரிய இடம் வழங்கி தமது சேவையினைச் செய்து வருவது, அனைவரது வரவேற்பையும் பெற்றுள்ளது. காலை எழுந்தவுடன் பத்திரிகையிலோ ஏனைய செய்தி ஊடகங்களிலேயோ எமது கண்ணோட்டம் செலகின்ற இக்கால சூழ் நிலையில், 'உதயன்' பத்திரிகையின் பணி தனித்துவமானது.

இப்பணியினைச் செவ்வனே ஆற்றிவரும் ஆசிரியர், செய்தி ஆசிரியர், ஏனைய பணியாளர்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக்கவும் இவர்களின் பணி பல்லாண்டுகாலம் தொடரவும் நல்லைக் குருமணியின் திருவடி பணிந்து இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## வாலிப மிடுக்குடன் வெற்றிநடை

உதயன் தனது 18ஆவது வயதை நிறைவு செய்து, 19ஆவது அகவையில் அடியெடுத்து வைக்கிறான். இது உதயனுக்கு மட்டுமன்றி, தமிழ்ச் சமுதாயத்திற்குமே பெருமைதரும் விஷயமாகும்.

ஒரு பத்திரிகை தொடர்ந்து நடப்பதற்கு ஆசிரியரின் ஆற்றல், நிர்வாகிகளின் விவேகம், பொது மக்களின் ஆதரவு, வர்த்தக சமூகத்தின் ஒத்துழைப்பு என்பன மிக மிக அவசியமானவை. 'உதயன்' இத்தனையையும் பெற்றிருப்பதனாலேதான் பதினெட்டு வருடங்களைப் பூர்த்தி செய்து, புதியதொரு வருடத்துக்குள் பிரவேசிக்கின்றான்.

வரலாற்று ஆய்வாளன் என்ற முறையில் நான் உதயனுக்கு மிகவும் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். கடந்த 18 வருட காலத்தில் தமிழ் மக்களின் வரலாற்றினை 'உதயன்' பதிவு செய்ததுபோல் வேறு யாருமே பதிவுசெய்யவில்லை என்று கூறலாம். உலகின் பல பாகங்களில் உரையாற்றுகின்றபொழுது நான் உதயனின் குறிப்புக்களையே ஆதாரமாகக் கொள்ளுவேன்.

கடந்த ஒரு வருட காலமாக நான் அமெரிக்காவில் உள்ள பிறின்ஸ்ரன் பல்கலைக்கழகத்தில் இருந்தபொழுது தினசரி காலை உதயனை இன்ரநெற் மூலமாக வாசித்து விட்டுத்தான் எனது கடமைகளைத் தொடருவேன். 'உதயன்', செய்திகளை உடனுக்குடன் தருகின்றது. தமிழ் பேசும் பிரதேசங்களில், குறிப்பாக யாழ்ப்பாணத்தின் மூலை, முடுக்கெல்லாம் நடைபெறுகின்ற விஷயங்களை அறிவிக்கிறது.

'உதயன்' பணி தொடரட்டும் நேர்மை, நிதானம், துரிதம் என்னும் பண்புகளைத் தொடர்ந்தும் காப்பாற்றி வாலிப மிடுக்குடன் வெற்றிநடை போடட்டும்.

-அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன்
பேராயர். தென் இந்திய திருச்சபை.



# உதயனுக்கு ஆசிகள்...

## உதயனின் துணிவான பணி தொடரட்டும்!

'உதயன்' பத்திரிகை 1985ஆம் ஆண்டு முதல் பத்திரிகைப் பணியில் ஆற்றிவரும் அளப்பெரும் பணிகளை நாம் நன்கு அறிவோம். கடினமான பல காலகட்டங்களைத் தாண்டி அது தனது 18ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுகின்றவேளை எமது வாழ்த்துக்களையும், ஆசீர்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆரம்பம்முதல் இன்றுவரை 'உதயன்' பத்திரிகை தமிழ் மக்களுக்காக ஆற்றிய பணிகளை நாம் இங்கு பட்டியலிடவேண்டிய தேவையில்லை. தமிழ் மக்கள் அனைவரும் அதனை நன்கு அறிவார்கள். யாழ் நகரிலே ஒரு பத்திரிகையும் இயங்காத ஒரு காலகட்டத்தில் தனித்து நின்று இப்பத்திரிகை யாழ். மக்களின் செய்திப் பரிமாற்ற சேவையை நிறைவாக ஆற்றியிருக்கின்றது. துணிவாக, பக்கம் சாராமல் ஆற்றிய தன் பணிக்காக இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் துணிச்சல்மிக்க பத்திரிகைக்குரிய விருதையும் இதுபெற்றுக்கொண்டது.

இன்று பல பத்திரிகைகள் வெளிவருகின்ற வேளையிலும் 'உதயன்' தனது அந்தத் துணிவான பயணப்பாதையினை பக்கம் சாராமல் தொடரவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

இனிவரும் காலங்களிலும் 'உதயன்' தமிழ் மக்களின் தேவைகளையும், உணர்வுகளையும், ஆசை, அபிலாசைகளையும் மனதில் கொண்டு நடுநிலைமையோடு துணிவாகப் பணியாற்ற வேண்டுமென்றே விரும்புகின்றோம்; வாழ்த்துகின்றோம்.

-மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ். ஆயர்.

## நீடு நிலைத்து பணி புரிக!

ஏழு மேகங்களான சம்வர்த்தம். ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகீ, நீலவருணம் என்பன தமக்கு வேண்டிய நீர்த்தாரைகளை கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, நர்மதை, சிந்து, காவேரி ஆதியாம் நதிகளிலிருந்து பெற்று, உலகின் பூமி யௌவனமாக அமையவேண்டுமென்பதற்காக மழைமூலம் செழுமையான தீர்த்தத்தை ஜீவராசிகளது தேவைகட்குத் தந்துதவுகிறது.

இதேபோன்றுதான் 'உதயன்' பத்திரிகையும் அஷ்டதிக்குகளிலிருந்து தமது நிருபர்கள் மூலமாகப் பெற்ற பல்வேறு செய்திகளைத் தரமறிந்து, தத்துவமறிந்து, பெறுமதியையுணர்ந்து செழுமைமிக்க செய்தித் தரவுகளையும், கட்டுரைகளையும், விமர்சனங்களையும், விளம்பரங்களையும், பாமரமக்களும் பயன்பெறத்தக்கதாக கடந்த 18 ஆண்டுகளாகத் தந்துநிற்கிறது. 'உதயன்' உதயமான காலந்தொட்டே யானும் உதயனது வளர்ச்சிக்கும், நீடுழி நிலைநின்று சமூகத் தொண்டை முன்னெடுக்கும் முயற்சிக்கும் பிரார்த்தித்த வண்ணமாக அமைந்துள்ளேன்.

யௌவன வயதை அடைந்திருக்கும் "உதயன்" சௌக்கியமாக வீறுநடை கொள்ளல் வேண்டுமெனப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள்
மாவையாதீனகர்த்தா-பிரதமகுரு.

## இருள் நீக்கும் ஒளி

'உதயன்' பத்திரிகை இன்று தனது பத்தொன்பதாவது அகவையை அடைகின்றது என்ற செய்தி கேட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்ற குறளுக்கு அமைவாகவும், 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி' வடிவமாக தினமும் காலையில் கதிர்களோடு இருளை நீக்கி வெளிச்சத்தை உலக மக்களுக்கு வெளிப்படுத்தி வரும் சூரியன் போல் உதயனும் காலையில் மக்களின் கரங்களில் கிடைக்கும்போது மன நிறைவு ஏற்பட்டு உலக செய்திகளை அறியும் வாய்ப்பு ஏற்படுகிறது. கடந்த 18 வருடங்கள் தனது சேவையை மிகத் திறம்பட செய்து, மக்கள் கரங்களில் தவழ்ந்து வந்துள்ளது. மக்களின் நன்மதிப்பை பெற்ற 'உதயன்' தனது விளம்பரங்கள் மட்டுமல்லாமல் தெய்வீக ஆக்கங்களையும் கட்டுரைகளையும் மும்மதத்தினருக்கும் ஆற்றிவருகின்ற சேவை மிகவும் போற்றப்பட வேண்டியதும் வரவேற்கத் தக்கதும். 'உதயன்' பத்திரிகை தமிழ் மக்கள் வாழும் இடங்களெல்லாம் நவீன முறைப்படி இன்ரநெற் மூலம் வெளியாகி வருவதும் ஒரு சிறப்பான விடயம்.

உடனுக்குடன் உண்மையான செய்திகளை வெளியிடும் பத்திரிகைத் தர்மத்தை ஓர் அங்கமாக அமைத்துள்ளது. எத்தனையோ நெருக்கடியின் மத்தியிலும் தான் மக்கள் முன் வரவேண்டும் என்ற முயற்சியும் பாராட்ட வேண்டியதொன்றாகும்.

'உதயன்' தனது சேவையை மேலும் முன்னெடுப்பதற்கு மக்களின் ஆதரவு மிகமிக முக்கியம். ஆகவே, இவற்றையெல்லாம் செயற்படுத்தும் நிறுவனத்தார், ஆசிரியர்கள், பணியாள்கள் யாவரையும் மேலும் விரிவுபடுத்துவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து உதயனின் பத்திரிகா தர்மத்தை நிலை நாட்ட அனைத்து பணியாள்களும் நலமாய்வாழ எல்லாம் வல்ல அன்னையைப் பிரார்த்தித்து வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள்.
சர்வதேச இந்துமத குருபீடாதிபதி.

## அஞ்சா நெஞ்சினன் "உதயன்"

'உதயன்' தனது உன்னதமான பணியில் மீண்டும் ஒரு புதிய அகவையைக் காண்கின்றான். பல்வேறுவிதமான நெருக்கடிகள் நிறைந்திருந்த காலகட்டங்களிலெல்லாம் எம்மக்களின் வாழ்வியல் சோகங்களை வெளியுலகிற்கு எடுத்தியம்பிய ஒரே குரலாக ஒலித்தவன் 'உதயன்'.

அச்சுறுத்தல்கள் மத்தியிலும், அஞ்சா நெஞ்சுடன் உண்மையான செய்திகளை, உடனுக்குடன் தாங்கி வந்தவனும் 'உதயனே'!. இப்போதும் அவன் பணி ஓய்ந்துவிடவில்லை. எம்மக்களின் யதார்த்த நிலையை வெளியுலகிற்கு எடுத்தியம்புவதோடு மட்டுமன்றி, அனைத்துவித தகவல்களையும் மக்களுக்கு தெரியப்படுத்தும் வகையிலும் அவனது சேவை தொடர்ந்தும் வளர்ந்துகொண்டே செல்கின்றது.

எனவே, காலத்தின் தேவையறிந்து பத்திரிகை தர்மத்திற்கேற்ப நடுநிலைமையோடும், உண்மையோடும் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டுமென 'உதயனை' வாழ்த்துவதோடு, இறையாசியும் வேண்டி நிற்கின்றேன்.

வண.கே.கருணாசேகர.
[illegible] திருச்சபை.
[illegible] மாவட்டம்.

## கட்டுப்பாடு, கண்ணியம் மிகுந்தவன்

கடந்த சிலகாலமாக காலையிலே எழுந்து முடிக்கவேண்டிய கடமைகளை நிறைவு செய்துகொண்டு முதலிலே "உதயன்" செய்தித்தாள் சஞ்சிகையைக் கையிலே எடுக்கிறோம். நாம் அறிய வேண்டிய அன்றாடச் செய்திகளைச் சுடச்சுட அறியவைப்பது "உதயன்" சஞ்சிகையாகும். அத்துடன், வாழ்த்துரைகளாலும் அஞ்சலி உரைகளாலும் நாம் அறிய வேண்டிய பெருமக்களின் விவரத்தைச் சுடச்சுடத் தருவதும் இதுவேயாகும். கட்டுப்பாடும் கண்ணியமும் நிறைந்த இச் சஞ்சிகையை, இன்று தமிழீழ மக்கள் பெரிதும் விரும்பிப் படிக்கின்றனர். மேலும் வெள்ளிக்கிழமைகளில் வெளியிடப்படும் சமயக்கருத்துகள் அனைவராலும் மிகவும் வரவேற்கத்தக்கவை. "பத்திரிகா தர்மத்தை" மேலும் போற்றி பெரியோர்களால் நல்வரவேற்பைப் பெற்று மேலும் பல்லாண்டு காலம் இது நின்று நிலவவேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

-கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.
தலைவர். தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரின் அடாவடித்தனங்கள் சமாதான முயற்சிக்கு ஒரு சவால்!

## இரா. சம்பந்தன் எம்.பி. தெரிவிப்பு

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரச படையினரின் அடாவடித்தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். 'பொங்கு தமிழ்' நிகழ்வுகளும் மாவீரர் தின விழாக்களும் சட்ட விரோதமானவையல்ல. அவை மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் நிகழ்வுகள். அதற்கு இடையூறுகள் ஏற்படுத்தி கசப்புணர்வுகளை அதிகரிக்க வேண்டாம் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் நேற்றுமுன் தினம் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

நேற்றுமுன்தினம் காலை நாடாளுமன்றம் கூடியபோது சபாநாயகரின் அனுமதியுடன் இரா.சம்பந்தன் எம்.பி. விசேட அறிக்கை ஒன்றை சபையில் சமர்ப்பித்தார். அறிக்கையை சமர்ப்பித்துப் பேசிய இரா. சம்பந்தன் எம்.பி. மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பொங்கு தமிழ், மாவீரர் தினம் என்பன காலம் காலமாக கொண்டாடப் படுகின்றன. பாதுகாப்புப்படையினர் மற்றும் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினர் ஆகியோருடன் இவ்விடயம் தொடர்பாக புலிகளால் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஆனால், கடந்த 21ஆம், 22ஆம் திகதிகளில் இராணுவத்தினரும் பொலீஸாரும் நடந்து கொண்ட விதம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயலாக அமைந்துள்ளது.

22 ஆம் திகதி யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரிச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலை அடித்து நொறுக்கியுள்ளனர். மாணவர்களையும் தாக்கியுள்ளனர். அங்கு வந்த படையினர் சுயநினைவற்ற நிலையிலேயே காணப்பட்டுள்ளனர். அப்போது அவர்களுக்குள் ஏற்பட்ட இழுபறியில் அவர்களுடைய துப்பாக்கிகள் வெடித்ததில் மூன்று படைவீரர்கள் காயமடைந்தனர் எனத் தெரியவந்துள்ளது.

அடுத்தநாள் 23 ஆம் திகதி காலை அங்கு வந்த பொலீஸார் மாணவர் பேரவை அலுவலகத்தைத் தாக்கி, உடைமைகளைச் சேதப்படுத்தியதுடன் அங்கிருந்த இரண்டு மாணவர்களையும் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

வவுனியாவில் மாவீரர் தினக் கொண்டாட்டத்திற்காக அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தல்களையும் தாக்கி சேதப்படுத்தியுள்ளனர்.

அண்மைக்காலங்களில் படையினரதும் பொலீஸாரினதும் அடாவடித்தனங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. இது சமாதான முன்னெடுப்புகளுக்கு ஒரு சவாலாகவே அமைந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அறிவித்துள்ளோம். அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்தமைக்கு நன்றி. எனினும், தொடர்ந்தும் இப்படியான சம்பவங்கள் இடம்பெறாமல் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் - இவ்வாறு அவர் கூறினார்.




# அரசமைப்பை மாற்றியமைத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## புளொட் சித்தார்த்தன் ஆலோசனை

ஜனாதிபதியும் பிரதமரும் இணக்கப்பாட்டுடன் அரசமைப்பை மாற்றி, இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்த வேண்டும் என புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே சித்தார்த்தன் எம்.பி. இப்படிக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் விடுதலைப் புலிகளும், அரசும, ஜனாதிபதியும் முக்கிய மூன்று அங்கத்தவர்களாக இருக்கின்றனர்.

பேச்சு மூலமே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணலாம். அதுவே சிறந்த வழி என்று பிரபாகரனும், பிரதமரும், ஜனாதிபதியும் வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டுள்ளனர்.

தற்போதைய சூழலில் பிரதமரும ஜனாதிபதியும் இவ்விடயத்தில் ஒரு பொது இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும். தென்னிலங்கையில் இணக்கப்பாடு காணப்பட்ட பின்னர்தான் புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும். ஜனாதிபதி சந்திரிகா பதவியிலிருக்கப்போகும் அடுத்த ஒன்றரை வருட காலப்பகுதிவரை பொ.ஐ.முவுடன் அரசு இணக்கப்பாட்டுடன் செயற்பட்டு, நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்துடன் அரசமைப்பை மாற்றி அமைத்து, அதன் ஊடாக இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும்.

வடக்கில் மீனவர்களும் தெற்கே தோட்டத் தொழிலாளர்களும் புறக்கணிக்கப்பட்டிருப்பது கவலைக்குரியது. தேசிய வருமானத்தை ஈட்டித் தருவதில் மலையகத் தொழிலாளர்களும்,வடபகுதி மீனவர்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றனர். ஆனால், இவர்களுக்கு விமோசனம் வழங்க அரசு தவறிவிட்டது.

வன்னி மாவட்டம் 90 வீத விவசாயிகளை உள்ளடக்கிய பிரதேசம். விவசாயிகளுக்கு உரமானியம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், உற்பத்திச் செலவு பன்மடங்கு அதிகரித்துள்ளது.

நெல்லின் கொள்வனவு விலை 13 ரூபா ஐம்பது சதம் என்று அரசு அறிவித்துள்ளது. ஆனால், பத்து ரூபாய்க்குக் கூட நெல்லை விற்பனை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் விவசாயத்தையே கைவிடும்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, விவசாயிகளின் மானியத்தை அதிகரித்து அவர்களின் நெல்லைக் கொள்வனவு செய்ய வழிவகுக்கவேண்டும்.

- இப்படி சித்தார்த்தன் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

# அதிகாரப் பசியையும் வேற்றுமையையும் களைந்துவிட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இறங்கி வாருங்கள்

## பிரதான கட்சிகளுக்கு ஜோசப் எம்.பி. அழைப்பு

காலங்காலமாக அதிகார அரசியலையும் கட்சி ஒற்றுமையின்மையையும் கொள்கைகளாகக் கடைப்பிடித்து வந்தமையால்தான், இனப் பிரச்சினைக்கான தீர்வு இன்று இவ்வளவு தூரம் இறுகிப்போயுள்ளது. இவற்றைக் களைந்துவிட்டு - நிலைமையின் பாரதூரத்தை உணர்ந்து - கிடைத்துள்ள கடைசிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி - இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வாருங்கள்.

- இவ்வாறு பிரதான கட்சிகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் பேசிய தமிழ்க் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 27 ஆம் திகதி வியாழக்கிழமை (இன்று) 6 மணிக்கு நடைபெறவுள்ளது. சரியாக, அதேதினம் அதே நேரத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவரது மாவீரர் தின உரையைத் தமிழீழ மக்களுக்கும், உலகத் தமிழ்மக்களுக்கும் ஆற்ற இருக்கின்றார்.

இந்த நாட்டில் கடந்த மூன்றாம் திகதி ஏற்பட்ட - எதிர்பாராத - அரசியல் நெருக்கடி மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது.

இதேபோன்று, எதிர்வரும் 27ஆம் திகதி (இன்று) தலைவர் பிரபாகரன் மக்களுக்கு என்ன செய்தியைச் சொல்லப்போகின்றார் என்பதைத் தென் இலங்கை மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்து இருக்கின்றனர்.

தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் உரையில் தானும் தனது இயக்கத்தினரும் சமாதான விரும்பிகள் என்பதை மீண்டும் வலியுறுத்துவதுடன், தமிழர் பிரச்சினையை சமாதான முறையில் தீர்த்துவைப்பதற்கு தாம் உறுதிபூண்டுள்ளதை வலியுறுத்தவுள்ளார்.

சமாதானமா அல்லது யுத்தமா என்ற முடிவைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு தற்போது தென் இலங்கை அரசியல் தலைமைகளதும், தென் இலங்கை மக்களதும் கைகளிலேயே தங்கியுள்ளது. இது சம்பந்தமாக இவர்கள் பிழையான முடிவை எடுத்தால் அது மீண்டும் ஒருமுறை இந்த நாட்டை யுத்தகளமாக்கும்; நாட்டைப் பிளவுபடுத்தும்.

தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினையை தென் இலங்கை அரசியல் தலைமைகளும், மக்களும் சமாதான முறையில் தீர்த்து வைக்க முன்வரவேண்டும். அப்படி அவர்களால் செய்ய முடியாது போனால், எங்கள் பகுதிகளை நாங்களே ஆள்வதற்கு விட்டுவிடுங்கள் என்று இந்தச் சபையிலே - எனது கடந்த 14 ஆண்டு கால நாடாளுமன்ற வாழ்க்கையிலே - பல முறை தெளிவாகக் கூறியுள்ளேன். அதையே நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன். இந்தச் சபையைச் சேர்ந்த இரு பகுதியினரும் தங்களுக்குள் உள்ள அரசியல வேற்றுமைகளை மறந்து இனப்பிரச்சினைக்கு சமாதான முறையில் தீர்வுகாண முன்வரவேண்டும். இது தான் கடைசிச் சந்தர்ப்பம்.

நல்லிணக்கமும் சமாதானமும் நாட்டிற்கு முக்கியம் என்று கூறிக்கொண்டு, படையைவிட்டுத் தப்பி ஓடுகின்றவர்களுக்கு அதிகமான பணத்தை ஒதுக்குவதன் அர்த்தம் என்ன? இந்தப் பணத்தை யுத்தத்தால் சின்னாபின்னமாக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்குப் பகுதியை கட்டியெழுப்ப ஏன் செலவிடமுடியாது?

வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பார்க்கும்போது, 2002ஆம் ஆண்டுமுதல் படிப்படியாகப் பாதுகாப்புக்கான நிதியை நிதி அமைச்சர் அதிகரித்துக் கொண்டு வருவதைக் காணமுடிகிறது. சமாதானம் என்ற கால கட்டத்திலும் - கடந்த 22 மாதங்களாக எதுவித தடங்கலும் இன்றி யுத்தநிறுத்தம் கடைப்பிடித்து வருகின்ற இவ்வேளையில் -

பாதுகாப்புக்கு என்று அரசு ஆண்டுதோறும் அதிக நிதி ஒதுக்குவதையிட்டு நாம் பெரும் அதிர்ச்சியும், ஆத்திரமும் அடைகின்றோம். திட்டமிட்டு அழிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதியை கட்டியெழுப்புவதே இன்றைய முக்கிய தேவை.

அடுத்த ஆண்டு பாதுகாப்பு செலவிற்கென பாதுகாப்பு அமைச்சுக்கு 5,208 கோடி ரூபாவும் - உள்துறை அமைச்சைச் சேர்ந்த பொலீஸ் படையினருக்கு 1,418 கோடி ரூபாவும் சேர்த்து மொத்தமாக 6,626 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை 2003ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு நிதியைவிட 280 கோடி ரூபா அதிகமாகும்.

கொடூரமான யுத்தம் நடைபெற்ற 1995 ஆம் ஆண்டுமுதல் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே பாதுகாப்புச் செலவினம் ஆண்டுக்கு 5,000 கோடி ரூபாவைத் தாண்டியது கிடையாது. 2000 ஆம் ஆண்டில் மட்டும் பாதுகாப்புக்கு 6,000 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், தற்போது ஒதுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நிதி யுத்தகாலத்தில் ஒதுக்கப்பட்ட பாதுகாப்பு நிதியிலும் 20 வீதம் அதிகம்.

எனவே, அரசு பெருமையாகப் பேசுகின்ற சமாதானத்தின் ஆதாயம் எங்கே? பாதுகாப்பிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் மேற்கொண்ட அதிகரிப்பு இந்த அரசு சமாதானத்தை நோக்கி நகர்கின்றதா அல்லது யுத்தத்தை மையமாக வைத்து செயற்படுகின்றதா என்ற சந்தேகத்தை எழுப்புகின்றது.

நிதி அமைச்சர் அவரது முன்னைய சகாக்களைப் போன்று வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு தனது பட்ஜட்டில் கிள்ளித்தான் கொடுத்திருக்கின்றார். திட்டமிட்டு அழிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிக்குத் தேவையான நிதி ஒதுக்கப்படவில்லை.

தேசிய அரசு சம்பந்தமாக தற்பொழுது பேச்சு அடிபடுகின்றது. சுதந்திரத்திற்குப் பின்பு, இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் நாட்டை மாறிமாறி ஆட்சி செய்து வந்துள்ளன. இவை கடைப்பிடித்த கொள்கைகள் காரணமாகவே இனங்கள் மத்தியில் ஒற்றுமையற்றுப் போனது; வடக்கு - கிழக்குமாகாண மக்கள் தனித்துவத்தை பேணவேண்டிய நிலை ஏற்பட்டது. இன்று இலங்கையில் இரண்டு இனங்களும் தனித்துவ நிலையிலேயே உள்ளன. இந்த நிலையில் ஒரு தேசம் - தேசிய அரசு என்று பேசுவதில் எந்த அர்த்தமுமே கிடையாது. தேசியத்தைக் கட்டியெழுப்புவதானால் முதலில் இனங்களுக்கு சம அந்தஸ்தும் சம உரிமையும் வழங்கப்படவேண்டும்.

ஓய்வூதியர்களுக்கு 10 சதவீத ஓய்வூதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. 70 சதவீதமான ஓய்வூதியர்கள் 5,000 ரூபாவுக்கும் குறைவான ஓய்வூதியமே பெறுகின்றனர். எனவே, இவர்களுக்கும் 1,250 ரூபா ஓய்வூதிய உயர்வு வழங்கப்படவேண்டும்.

வடக்கு - கிழக்கில் சுற்றுலாத்துறை, கைத்தொழில் ஆகியவற்றின் அபிவிருத்தி சம்பந்தமாக அரசு கவனம் செலுத்த முன்வரவேண்டும். இப்பகுதியில் உள்ள குடிசைக் கைத்தொழில்களுக்கு அரசு ஊக்குவிப்பும், நிவாரணமும் வழங்கவேண்டும்.

தனியார் விவசாயிகளை ஊக்குவிப்பதற்கான திட்டம் இப்பகுதியில் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்ய அரசு பல - புதிய கொள்கைத் திட்டங்களை அமுல்படுத்த முன்வரவேண்டும்.

நாட்டின் அபிவிருத்திக்கும், சுபீட்சத்துக்கும் முக்கிய தேவை சமாதானமாகும். சமாதானம் இல்லையேல் பொருளாதார வளர்ச்சி பற்றியோ அல்லது நாட்டின் அபிவிருத்தி பற்றியோ நாம் பேசமுடியாது. காலங்காலமாக அதிகாரத்தைக் கைப்பற்றும் ஒரே நோக்கத்தோடு, வெற்றுப் பட்டமையும் அதிகார அரசியலும் இரு கட்சிகளுக்குமான ஒற்றுமை இன்மையுமே இந்த நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தடையாக இருந்துவந்துள்ளன.

இப்போதாவது இச்சபையின் இரு பகுதியினரும் இப்பிரச்சினையின் பாரதூரத்தை உணரமுன் வரவேண்டும். அதிகார மோகத்தையும் - ஒற்றுமை இன்மையையும் களைந்துவிட்டு இந்த நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில் தீர்வு காண்பதே புத்திசாலித்தனமாகும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாண பிரதமர்; ஜனாதிபதி முன்வரவேண்டும்

## வெளிவிவகார அமைச்சர் வேண்டுகோள்

கொழும்பு,நவ.27

அதிகாரப் போட்டியில் இறங்காமல் ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து அரசியல் நெருக்கடியைத் தீர்க்க முன்வரவேண்டும்.

வெளிவிவகார அமைச்சர் டிரோன பெர்னாண்டோ நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் பேசும்போது இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

தொடரும் இனப்பிரச்சினை பெரும் எண்ணிக்கையான உயிர்களையும் பெருமளவு சொத்துக்களையும் காவு கொண்டுள்ளது. இதனால் நாட்டின் பொருளாதாரம் சீரழிந்தது. எனவே முதற்கட்டமாகப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் இந்த வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

சமாதான முன்னெடுப்புகளுக்கு சர்வதேச ஆதரவைப்பெறுவது அரசின் நோக்கமாகும். சர்வதேச சமூகம் சமாதான முன்னெடுப்புக்களுக்குப் பூரண ஆதரவை வழங்குகின்றது. இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், சீனா, கனடா, ஆஸ்திரேலியா ஆகியவை சமாதான முன்னெடுப்புக்களை அவதானித்து ஆதரவு வழங்கிவருகின்றன.

2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுக்கு சர்வதேச ரீதியில் பெரும் பிரசாரம் வழங்கப்பட்டது.

இலங்கையின் புனரமைப்புப் பணிக்கும், அபிவிருத்திப் பணிகளுக்கும் 450 கோடி அமெரிக்க டொலர்கள் நிதியாகக் கிடைத்தது. இருந்தும், இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு மத்தியில் கிடைத்த நிதியைப் பயன்படுத்த முடியாமலிருக்கிறது.

எனவே, அரசியல் லாபம் கருதாது அனைத்துக் கட்சிகளும் நாட்டின் அபிவிருத்திக்கு உதவவேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்



நல்லூர் கமநல சேவை நிலையக் கட்டடத்தில் இயங்கும் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையில் யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

**திரு.ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன்**

அவர்கள் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக 10.11.2003இல் யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மாசேரி, வரணி
வாழ் மக்கள்.

(C/31514)(35-15-16-21)

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 - 06 - 1921



உதிர்வு 08 - 12 - 2002

திருமதி **கதிரவேலு விசாலாட்சி**

(புளியங்கூடல்)

அன்பே உருக் கொண்ட
அம்மாவே எங்கள் தெய்வம்!
கண் போல் எமைக் காத்த
கருணையின் இருப்பிடமே!
பாச மழை பொழிந்து
பாரில் நேர்மையுடன் வாழவைத்தீர்!
விண்ணடைந்து ஓராண்டு என்று
விக்கித்து நிற்கின்றோம்
விக்ன விநாயகன் பாதங்களில்
வீற்றிருந்து எமைக் காத்தருள்வாய்!

உபதபாலகம்,
புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

- குடும்பத்தினர்.

(25060)(35-21-15-15)

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி,நவ.27

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான "ஞானச்சுடர்" ஆத்மீக சஞ்சிகையின் கார்த்திகை மாத இதழ் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

சஞ்சிகையின் வெளியீட்டுரையை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் சி.சிவஞானராஜாவும், மதிப்புரையை பிரபல எழுத்தாளர் தெணியானும் நிகழ்த்துவர்.

(எ-173)

## மதுபோதையில் வாகனஞ்செலுத்தியவருக்கு சிறை

வடமராட்சி,நவ.27

மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதி ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தால் இரண்டு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அல்வாய் மேற்கைச் சேர்ந்த தவராசா சந்திரலிங்கம் என்பவர் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணை முடிவில் குறிப்பிட்ட சாரதிக்கு இரண்டு மாத சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

(எ-173)

**USA Green Card Lottery**

★அமெரிக்காவில் சட்டபூர்வமாக உழைத்து வாழ Green Card Lotto வில் பங்குபற்ற விண்ணப்பித்துத் தரப்படும். அத்துடன், நீங்கள் விண்ணப்பித்ததற்கான உரிய மூல ஆவணமும் வழங்கப்படும்.
★U.K. (லண்டன்) விசா விண்ணப்பப் படிவத்தினையும் பெற்றுக்கொள்ளலாம்.
விவரங்களுக்கு அழையுங்கள்.

S.பிரதீபன்
தொ.பே.0776 153874
யாழ்ப்பாணம். (25091)

**அறிவித்தல்**

இறுதிச் சடங்குகள், சமய, அந்தியேட்டிக் கிரியைகள் செய்வதற்கு -
தொடர்புகொள்ளவும்:
**திரு.கனகசபை ஈஸ்வரஐயர்,**
தேங்காய் மூலை -
அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு.
(25061)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567
(31109)

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி வாரியப்பர் சிவன்கோயில்
செருக்கற்பதி சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு

**சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்**

அவர்கள் 24.11.2003 திங்கட்கிழமை யாழ். மாவட்ட நீதிமன்றில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணஞ் செய்துகொண்டார். அவரது சமய, சமூகப் பணிகள் நல்வழியில் தொடர அமிர்தபாஷிணி அம்பாளைப் பிரார்த்தித்து பாராட்டி வாழ்த்துகின்றோம.

- பிரம்மஸ்ரீ இ.சுரேஸ்வரசர்மா
ஆலய ஸ்தானிக குழு.

பண்ணாகம். (25084)(25-15-16-21)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10-09-1939



உதிர்வு 27-11-2000

அமரர்

## ஆறுமுகம் சண்முகநாதன்

(இளைப்பாறிய முகாமையாளர், மக்கள் வங்கி)

மூன்றாண்டு போனதையா உன் முழுமதி முகங்கண்டு
முந்தையர் மண்ணுன்னை முழுமூச்சாய் தேடுதையா
ஏன் எமை விட்டகன்று எட்டாத இடம் சென்றாய்?
ஏந்தலே உன்னினைவை எப்படி மறப்போம்?

வீண்பொழுது போக்கி நீ வீணனாய் அலையாமல்
விருப்புடனே நற்பணிகள் செய்துமே வந்தாய்
ஊண் உறக்கம் இல்லாது ஊருக்காய் உழைத்தாய்
உத்தமனாய் விளங்கி சேவையதில் உயர்ந்தாய்.

மாண்புறும் உன்னுடலும் இராணுவ வாகனத்தால்
மண்மீது சாய்ந்ததுவோ மறுகி நாம் நிற்கிறோம்
மாண்புடைய பாரதத்தில் மன்னுயிரும் பிரிந்ததுவோ?
மறுபிறப்புத் தனிலேனும் வருவாய் எம்முடனே.

ஆண்டு பல ஆனாலும் ஆறாத் துயருடனே
அழுதழுது நிற்கின்றோம் ஆறுதலைத் தாராயோ?
மீண்டொருகால் வாராயோ மிகை மகிழ்வு தாராயோ?
வேண்டுகிறோம் ஈசனிடம் விடையருளிச் செய்யாயோ?

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள்.

(C-31515)(34-21-15-16)

# நல்லூர் பிரதேசசபை
# கேள்வி அறிவித்தல் - 2004

01. 01. 2004 ஆம் திகதி முதல் 31. 12. 2004 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி கோரப்படுகின்றது.

| சந்தைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | | | |
| திருநெல்வேலிச் சந்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் | 1.000.00 | 15 000.00 | 430 3000.00 |
| கொக்குவில் உப அலுவலகம் | | | |
| கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை, துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் | 500.00 | 5 000.00 | 195 010.00 |
| கோண்டாவில் வடக்கு அரசடி வீதி மீன்சந்தை | 100.00 | 500.00 | 1 115.00 |

- கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித்திகதி: 01.12.2003 திங்கள் 12.00 மணிவரை
- கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி: 02.12.2003 செவ்வாய் 10.00 மணிவரை
- கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி: 02.12.2003 செவ்வாய் 2.00 மணி

மேலதிக விவரங்களை நல்லூர், கொக்குவில் பிரதேசசபை உப அலுவலகங்களிலும் பிரதேச சபை தலைமைச் செயலகத்திலும் காரியாலய நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

நல்லூர் பிரதேசசபை,
திருநெல்வேலி.
25.11.2003

**செல்லையா செல்வரத்தினம்**

(C31513)(34)

# மரண அறிவித்தல்

## திருமதி தவமணி அருணாசலம்

உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி அருணாசலம் 22.11.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - இராசம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற அருணாசலத்தின் அன்பு மனைவியும் விஜயதர்மன் (ஜேர்மனி), நித்தியகலா, விஜயகலா, ஜெயதர்மன், ஜெயகலா (ஜேர்மனி), கலாமதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் வசந்தமலர் (ஜேர்மனி), குகானந்தன், ஜெயக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் துவாகரன் (ஜேர்மனி), பவித்திரா (ஜேர்மனி), லக்ஷன், குகதீசன், துஷாரா (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற இராசதுரை, நடராசா, இராசரத்தினம், பொன்னம்பலம், யோகராணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (27.11.2003) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு 12 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

உடுவில் தெற்கு,
மானிப்பாய்.

(25105)(35-21-16-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் போரில் நாங்கள் வெற்றி அடைந்தே தீருவோம்!

## அரசியல்துறைப் பள்ளி அதிபர் அரசண்ணா தெரிவிப்பு

வடமராட்சி,நவ.27

தோற்றுப்போகும் போராட்டத்தை விடுதலைப் புலிகள் நடத்தவில்லை. சர்வதேச சூழலுக்கமைய எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறோம். எங்களை உலகம் உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருக்கிறது. விடுதலைப் போரில் நாம் வெற்றியடைந்தே தீருவோம்.

- இவ்வாறு விடுதலைப் புலிகளின அரசியல்துறைப் பள்ளி அதிபர் கே.அரசண்ணா பருத்தித்துறை பஸ் நிலையச் சதுக்கத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவீரர் தின விழாவில் பேசுகையில் கூறினார்.

விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் பருத்தித்துறையைச் சேர்ந்த மாவீரர்களின் உருவப் படங்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஈகச் சுடர் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து எஸ்.செபஸ்ரியான் தலைமையில் நடைபெற்ற மாவீரர் தின விழாவில் கே.அரசண்ணா உரையாற்றினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

இந்நாட்டின் அரசுகள் தமிழ் மக்களை மட்டுமல்ல, உலக நாடுகளையே ஏமாற்றி வருகின்றன. இந்தியா, பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளும் ஏமாற்றப்பட்டுள்ளன.

கடலில் மீன்பிடிக்க சீனாவிற்கு அனுமதி கொடுத்துவிட்டு சீன மீனவர்களைப் பிடித்து சிறையில் தள்ளினார்கள். இதேபோல சொன்னதைச் செய்யமாட்டாத - ஒப்பந்தங்களைச் செய்துவிட்டு அவற்றை அமுல்படுத்தாத அரசுகள் எமது தேசியத் தலைவர் பிரபாகரனையும் ஏமாற்றப்பார்க்கின்றன.

ஆனால், அது முடியாத காரியம். ஏனென்றால், தேசியத் தலைவர் பிரபாகரனை மக்கள் மதிக்கிறார்கள். அது தான் எந்த ஒரு அரசினாலும் எமது தலைவரை ஏமாற்றமுடியவில்லை. மக்களின் சுபீட்சத்துக்காக எமது தேசியத் தலைவர் உழைத்து வருகிறார். தமிழ் மக்களை நம்பிய தலைவர் அவர். இறைவன் காப்பாற்றட்டும் என்று எமது முன்னைய அரசியலாளர்கள் கூறினார்கள். ஆனால், மக்கள் காப்பாற்றட்டும் என்பதே எமது தலைவரின் கருத்து. உலகத்திலேயே சோகத்தைத் தாங்கிய வண்ணம் இருப்பவர் எமது தேசியத் தலைவர் பிரபாகரன். சோகத்துக்கு மத்தியிலும் தமிழ் இனத்தின் விடுதலையைப் பற்றி எந்நேரமும் சிந்தித்த வண்ணமும் அவர் உள்ளார்.

இன்று யாழ். குடாநாட்டில் சுற்றியிருக்கும் படையினர் மத்தியில் இருந்துகொண்டு நாம் மாவீரர் தினத்தைக் கொண்டாடுகிறோம். தேசியக் கொடி ஏற்றக்கூடாது என சில தடைகளை இங்கு அவர்கள் போட்டாலும் உலக நாடுகள் முழுவதும் எமது தேசியக்கொடி ஏற்றப்பட்டு மாவீரர் தினம் கொண்டாடப்படுகிறது. இருண்ட கண்டங்களான வடதுருவம், தென் துருவம் பகுதிகளை ஆய்வுசெய்யச் சென்றுள்ள விஞ்ஞானிகளுக்கு உதவும் ஆய்வாளர்களாக தமிழர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் கூட தென்துருவம், வடதுருவத்தில் எமது தேசியக் கொடிகளை ஏற்றி வைத்தே தமது கடமைகளை இந்நாளில் மேற்கொண்டு வருகிறார்கள்.

அஞ்சுகின்ற சூழலில் மாவீரர் தினத்தைக் கொண்டாடுகிறோம் என எண்ணக்கூடாது. இனிமேலும் நாம் ஒதுங்கியிருக்கக் கூடாது. நாம் ஒரு போதும் தோற்றுவிடவில்லை; ஒதுங்கிவிடவில்லை; அடங்கிவிடவில்லை; எதற்கும் அஞ்சவில்லை. தமிழ் மக்களுக்கென தனியான நிலம், மொழி, பண்பாடு, கலை கலாசாரம் உண்டு. இதற்கு மேலாக ஆயிரக்கணக்கான மாவீரர்களைப் பெற்றுள்ளதோடு பல மிக்க தேசியப்படை ஒன்றும் எம்மிடம் உண்டு. இந்த அம்சங்கள் அனைத்தும் சுயநிர்ணய ஆட்சிக்கு தகுதியானவை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மாவீரர்கள் கட்டி வளர்த்த படையால் இன்று நாம் உயர்ந்து நிற்கிறோம். எமது பலம்தான் சமாதானம் பேசவந்தது. எமது படைபலம் வெல்லப்படாத படைபலம். இப்படைப்பலம் தான் எமக்கு வெற்றி. வெற்றியைத் தவிர வேறில்லை - என்றார்.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசச் செயலாளர் க.சூரியகுமாரன் நன்றி தெரிவித்துப் பேசினார்.

(எ-173)

# நெடுந்தீவுக்கான கடல் போக்குவரத்து எந்நேரமும் தடைப்படும் அபாயம்!

## பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரஸ்தாபிப்பு

நெடுந்தீவு,நவ.27

நெடுந்தீவு கடல்வழிப் போக்குவரத்துச்சேவை முற்றாக ஸ்தம்பிதமடையக் கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அரச படகான 'குமுதினி' படகுச் சேவை கடந்த இரண்டு மாதங்களாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் தற்போது பல நோ.கூ.சங்கப் படகுகளான 'சமுத்திரதேவி', 'உதயதாரகை' இரண்டுமே பொருள்களை ஏற்றி இறக்குவதுடன் பயணிகள் சேவையிலும் ஈடுபட்டு வருகின்றன.

இந்த இரண்டு படகுகளுமே இயந்திரக்கோளாறுக்கு உட்படுவதால் எந்த வேளையிலும் திருத்த வேலைகளை ஆரம்பிக்க வேண்டியநிலை இருப்பதாக சங்கத் தலைவர் நேற்றுமுன்தினம் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவித்தார்.

கூட்டுறவுச் சங்கத்தின் படகுகளின் திருத்த வேலைகள் உரிய நேரத்தில் இடம்பெறாவிடின், இயந்திரங்களில் மேலும் பல சிக்கல்கள் தோன்றக்கூடும் எனவும் - தெரிவித்த கூட்டுறவுச் சங்கத்தலைவர்,

தற்போது நோயாளர் சேவைக்கெனக் கட்டப்பட்ட 'சமுத்திரதீபம்' அம்புலன்ஸ் படகை நெடுந்தீவுக்கான தற்காலிக சேவையில் ஈடுபடுத்த அரச அதிபரின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அரச மோட்டார் படகான குமுதினியின் நிலைபற்றித் தெரிந்துகொள்ள பொதுமக்கள் விரும்பினாலும்கூட, மாதாந்தம் நடைபெறும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் எவரும் கலந்துகொள்ளாமல் விலகி இருப்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

(எ-111)

### குண்டுத் தாக்குதலில் ஏழு பேர் காயம்!

திருகோணமலை மூர் வீதியில் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஏழு பேர் காயமடைந்தனர். இவர்களில் ஒருவர் பலத்த காயங்களுக்கு இலக்காகி உள்ளார்.

இவர்கள் திருகோணமலை அரசினர் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் இடம்பெற்றதை அடுத்து அந்தப்பகுதியால மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்கானார் என்று ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்தி ஒன்று தெரிவித்தது.

### மெலிஞ்சிமுனைக்கு குழாய் மூலம் குடிதண்ணீர்

ஊர்காவற்றுறை,நவ.27

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை பிரதேசத்திற்கு முதல் தடவையாக தற்பொழுது தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் குழாய மூலம் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீண்ட காலமாக குழாய் மூலம் நீர்விநியோகம் மேற்கொள்வதற்கான வேலைகள் பூர்த்தியாக்கப்படாததனால் பவுசர் மூலமே அப்பிரதேசத்திற்கு குடிதண்ணீர் விநியோகம் மேற கொள்ளப்பட்டு வந்தது.

எனினும், மேற்படி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதனால் ஊர்காவற்றுறை நீர்தாங்கியில் இருந்து தினமும் மாலைவேளையில் இப்பிரதேசத்திற்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

(எ-16)

## சாயி சிந்தனை

### பூரண சரணாகதி



சரணாகதிக்கு ஒரு உயர்ந்த எடுத்துக்காட்டு உண்டென்றால் அது லட்சுமணன்தான். ராமர், சீதை, லட்சுமணன் மூவரும் கானகம் சென்றனர். சித்ரகூட மலையை அடைந்ததும் ராமர், லட்சுமணனை நோக்கி, அவனுக்குப் பிடித்தமான இடத்தில் ஒரு பர்ணசாலை அமைக்குமாறு கூறினார். இவ்வார்த்தைகளைக் கேட்டதும், லட்சுமணன் மனம் புண்ணாகித் துயரத்தால் தலை கவிழ்ந்தான். இதனைக் கவனித்த சீதை, லட்சுமணனைக் கேட்டாள். "இதற்கு ஏன் வருத்தப்படுகிறாய் லட்சுமணா? உனது சகோதரன் எதுவும் கடுமையான வார்த்தைகளைப் பேசவில்லையே? நீ ஏன் வருந்துகிறாய்?" லட்சுமணன் கூறினான் "தாயே! எப்போதாவது எனக்கென்று ஏதாவது தனிப்பட்ட விருப்பம் இருக்கிறதா? ஸ்ரீராமனுடைய விருப்பமல்லவா என் விருப்பம். நான் ராமனிடம் பூரண சரணாகதி அடைந்து விட்டேன். எனக்குத் தேவையானதெல்லாம் ராமனது கட்டளைகள்தான்! அவற்றை நான் நிறைவேற்றுவேன். இப்படியிருக்கையில், ராமன் என்னை என்விருப்பத்திற்கேற்ற இடத்தைத் தெரிவு செய்து பர்ணசாலை அமைக்குமாறு கூறிய வார்த்தைகளின் தாக்குதலை நான் எங்ஙனம் தாங்க முடியும்? அது என்னை ராமனிடம் இருந்து தனியாகப் பிரித்து விடுவதைப்போல் ஆகாதா?"

ஸ்ரீராமன், லட்சுமணனின் புனித உணர்வுகளையும், அவனது தூய்மையான சரணாகதியையும் புரிந்து கொண்டவராய், பர்ணசாலை அமைக்கத் தகுதியான இடத்தைத் தானே சுட்டிக் காட்டினார். உண்மையான பக்தனின் உள்ளுணர்வுகள் இத்தகையதாக இருக்க வேண்டும். உனது எண்ணங்கள் எப்போதும் இறைவனை மையமாக வைத்தே அமைய வேண்டும். இவ்வுலகம் வெறும் நகர்ந்து செல்லும் மேகத்தைப் போன்றது; நிரந்தரமற்றது. ஆனால் உனக்கும், இறைவனுக்கும் இடையே உள்ள பந்தம் மட்டும் எப்போதும் நிரந்தரமானதாகவும் அழிவற்றதாகவும் இருக்கும்.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

## கல்விச்சாலைக் காட்சிகள்



பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய இணைப்பாளர் எந்திரி ச.ஆ.ஞானேந்திரன் பாடசாலைக் கொடியேற்றுவதை படத்தில் காணலாம். வித்தியாலய அதிபர் வீ.மீனேஸ்வரன் மற்றும் பிரமுகர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

*(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*




வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வாணி விழாவில் ஆசிரியை செல்வி புஸ்பகாந்தி செல்லையாவின் தயாரிப்பில் மேடையேற்றப்பட்ட குமர குருபரர் நாடகத்தில் ஓர் காட்சி. *(படம்:கொக்குவில் செய்தியாளர்)*




கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் வருடாந்த தமிழ் விழாவில் மாணவிகள் வழங்கிய அபிநயப் பாடலில் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம். (எ)



சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்கு காணி கொள்வனவு செய்வதற்கென சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஐக்கிய இராச்சியத்துக்கான பழைய மாணவர் சங்கக் கிளையினர் பத்து இலட்சம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளனர். இது தொடர்பாக இடம்பெற்ற நிகழ்வில் ஐக்கிய இராச்சியக் கிளையின் போஷகர் திருமதி சரஸ்வதி பொன்னம்பலம் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொருளாளர் யோ.ஜெயக்குமாரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (எ)

# ஜே.வி.பி. - பொ.ஐ.மு. கூட்டணி முயற்சி இனப்பிரச்சினைத் தீர்வுடன் தொடர்பற்றது

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்க முயல்வதற்கும் பிரதான கட்சிகள் இரண்டும் இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. தேர்தலுக்கு முகம் கொடுக்கும் போது ஜே.வி.பி [illegible]

இப்படி ஜனாதிபதி சந்திரிகா [illegible] தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின கூட்டம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இங்கு தற்போதைய அரசியல் நிலைமைகள், சமாதான நடவடிக்கைகள் ஆகியவை குறித்து ஜனாதிபதியிடம் பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வியெழுப்பினர்.

கேள்விகளுக்கு பதில் அளிக்கும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவிக்கையில்:-

தற்போது உள்ள பிரச்சினைகளுக்கு மத்தியில் தேசிய அரசு என்று இல்லாமல் அனைத்துக்கட்சிகளையும் உள்ளடக்கிய அரசு ஒன்றே உருவாக்கப்படும். இதற்கு ஜே.வி.பி. உட்பட ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படும் - என்று கூறினார்.

(ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 97ஆவது அகவையில்:::
27-11-2003



திருமதி சின்னம்மா நமசிவாயம்

(மலாயன் ஓய்வூதியர்)

நூற்றாண்டு காலம் நோய் நொடியின்றி வாழ
விழிசிட்டி ஞானவைரவக் கடவுளை வேண்டுகின்றோம்.

"இந்திரகிரி",
இரும்பு மதவடி,
கரவெட்டி. (24949) (26-15-21-13)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
நந்திகா (பேர்த்தி).

## அரச ஊழியர்களுக்கு மும்மொழிப் பயிற்சி

அரச ஊழியர்களுக்கான மும்மொழித் தேர்ச்சி பயிற்சி வகுப்புகள் வட-கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் இப்பயிற்சி வகுப்புக்கள் யாழ்ப்பாணத்திலும் நடத்தப்படவுள்ளதால் இப்பயிற்சியைப் பெற விரும்புவோர் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதிக்குமுன்னர் தத்தமது திணைகளங்கள் ஊடாக பணிப்பாளர் முகாமைத்துவ அபிவிருததிப் பயிற்சித் திணைக்களம், உப்புவெளி, திருகோணமலை என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அடிப்படை, உயர்தரம் எனும் தரங்களில் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகள் மொத்தம் 108 மணித்தியாலங்கள் கொண்டதாக அமையும். ஒவ்வொரு பயிற்சிநெறி முடிவில் பரீட்சை நடத்தப்பட்டு சான்றிதழ்களும வழங்கப்படும் என முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளாார். (எ-173)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை**
(ஓய்வுபெற்ற காசாளர், ப.நோ.கூ.ச., சாவகச்சேரி)

பிறப்பு 23.10.1944 — இறப்பு 08.12.2002

*பேரோடும் புகழோடும் அவனியிலே வாழ்ந்தீர்!*
*எம்மை விட்டுப் பிரிந்ததனால் வேதனையில் வாடுகிறோம்.*
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

**இவர் அமிர்தாஜினி, காண்டீபன், செந்தூரன், நந்தகோபன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் யாதவனின் மாமானாரும் அர்ணன், யதுஷா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை, இலச்சுமிப்பிள்ளை, சந்திரசேகரம், தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சரஸ்வதியின் அன்புக் கணவருமாவார்.**

தற்காலிக முகவரி:
ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

நிரந்தர முகவரி:
கிராம்புவில்,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.
(25074) (25-13-15-21)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான சுபானு வருடம் கார்த்திகை மாதம் 12ஆம் நாள் நாளை (28.11.2003) வெள்ளிக்கிழமை காலை 7.50 மணிக்கு மேல் 9.30 மணிக்குள் தனு லக்கினத்தில் உத்தராட நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**பால்ராஜன்** (லண்டன்)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**கஜலக்ஷ்மி**
அவர்களுக்கும்

மணமகன் இல்லத்தில் திருமணம் செய்து வைக்க திருவருள் துணையுடன் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு. N.செந்திவடிவேல்.
திருமதி சிவரூபராணி (இந்திரா)
யாழ்.வீதி, வல்வெட்டித்துறை.

(இருவீட்டார் அழைப்பு)

திருமதி J.ராஜேஸ்வரி.
திரு. T.C.N.சரவணமுத்து.
திருமதி மகாலக்ஷ்மி
யாழ்.வீதி, வல்வெட்டித்துறை.

(24984) (26)

## பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
### பருத்தித்துறை

93/5 ஆம் இலக்க 10.01.1974 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கூட்டுறவு விதிக்கோவையின் கீழான பிரிவு 18(1) இற்கிணங்க, பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கத்தின்

## பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களால் 20.11.2003 ஆம் திகதிய கடிதத்தின்படி அதிகாரமளித்த உத்தியோகத்தர் திரு. ஐ. நாகேஸ்வரன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்) தலைமையில் அவரின் வேண்டுகோளுக்கிணங்க நடத்தப்படும்.

**கூட்டம் நடைபெறும் திகதியும் காலமும்:**
**30.11.2003 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி.**

**கூட்டம் நடைபெறும் இடம்:**
பருவதவர்த்தினி மண்டபம்
(பருத்தித்துறை சிவன் கோவிலடி)

**நிகழ்ச்சி நிரல்:**
(1) மௌன இறை வணக்கம்.
(2) தற்போது சங்கத்தில் எழுந்துள்ள நிலைமையை ஆராய்தலும், தொடர் நடவடிக்கையும்.
(3) நன்றியுரை.

பொதுச்சபை பேராளர்கள் தவறாது சமுகமளிக்கவும்.

★ குறிப்பு: கடிதம் கிடைக்கப்பெறாத பேராளர்கள் இவ்விளம்பரத்தை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

(C31504)(34-13-15-25)

**கூட்டுறவு சேவையிலுள்ள செயலாளர்.**

## தமிழீழ வைப்பகம்
## பணிநிலை வெற்றிடம்

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

பணிநிலை:- **அலுவலர் (பயிலுநர்)**

தகைமைகள்:- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏற்றுக்கொள்ளக் கூடிய பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.
அல்லது
ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக்கல்லூரி ஒன்றில் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம:- **4,500 + 4,000**

அகவை எல்லை:- **32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.**

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவுசெய்யப்பட்டுக் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "ஆள்சேர்ப்புக்கான வேண்டுகை - அலுவலர் (பயிலுநர்)" எனக் குறிப்பிடப்பட்டு 2003/12/15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.**

குறிப்பு:- ☞ நிறைவுசெய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவுத்தபாலில் (மேலாளர், ஆளுகைப்பகுதி, நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ். சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம். (C/31453) (26-13-15-21)

## முதலாவது வருட நினைவஞ்சலி



திருமதி **கந்தசாமி செல்லம்மா**

பிறப்பு 05-04-1935 — இறப்பு 07-12-2002

திதி: சதுர்த்தி

அன்போடு பேசி பண்போடு அரவணைத்து
எம்மை ஆதரவாய் வழிநடத்திய அன்னையே!
நீங்கள் மறைந்து ஓராண்டு கடந்தாலும்
உங்கள் நினைவு உள்ளத்தில் என்றும் ஒளிவீடும்!
ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

கூழாவடி லேன்,
ஆனைக்கோட்டை. (25036) (26-13-15-25)

- பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைகளில் உதயன்

## உதயனே ஒளிவிளக்காக வாழி!

மதிகுளிர் செய்தி யெல்லாம்
வகைவகை எடுத்துக் காட்டிப்
பதிகுளிர் அறிஞர் போற்றும்
பயன்தரு கற்பகம் போல்
துதிகுளிர் உலக மெங்கும்
சுற்றிடும் கீர்த்தி பெற்ற
உதயனே மேரு நின்ற
ஒளிவிளக் காக வாழி!

ஆண்டுகள் பதினெட்டாகி
ஆலெனப் படர்ந்து நின்று
நீண்டநற் சேவையாற்றி
நிதிவளம் கலைவளங்கள்
தூண்டுமெய்ச் சமூகசேவை
துணைதரு சமய சேவை
வேண்டுசெந் தமிழின் சேவை
விளம்பரம் புரிந்தாய் வாழி!

காவியம் ஓவியங்கள்
கற்றிடும் மாணாக்கர்க்கு
மேவிய கல்வித்தேர்ச்சி
வினைபல கவிதைக் கொத்து
பூவியல் விஞ்ஞானங்கள்
புந்திசேர் மெய்ஞ்ஞானங்கள்
ஆவலாய்ச் சான்றோர்கற்க
அமுதம்போல் தந்தாய் வாழி!

பதினெட்டும் பூர்த்தியாகி
பத்தொன்பான் அகவை காணும்
உதயனே நீ பல்லாண்டு
உதித்தெழும் சூரியன்போல்
பதிதரு பொருளாதாரம்
பயில்சமா தானம், நாட்டில்
கதிமிகு முரிமை பொங்கக்
கருமங்கள் பொழிந்து வாழி.

அருட்கவி
சீ.விநாசித்தம்பி M.A.
தலைவர், இந்துசமயப் பேரவை.

## தூயநல் 'உதயன்' வாழி!

பத்திரிகா தர்ம மதைப்
பழுதறவே கடைப் பிடித்து
எத்திசையு மேற்ற முற
எழுகதிரா யெழுந் திட்டாய்!

உலகத்துப் புதி னங்கள்
உயரியநல் லாக் கங்கள்
பலமாக ஈயு முந்தன்
பண்புக்கோ ரெல்லை யில்லை!

வாசகரின் மனக் கடலில்
வனப்பான ஓட மதாய்
பாசமுடன் ஒடு கின்ற
பாங்குடனே ஓங் கிடுவாய்!

அஞ்சாமை, நீதி, நேர்மை
அணிகல னாகக் கொண்டு
துஞ்சாது சேவை செய்யும்
தூயநல் 'உதயன்' வாழி!

-கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம்

## வாழிய உதயன்...!

உதயனே!
நீ உதித்ததால்
எங்களது அறிவுக்கண்கள்
திறந்தன.

சுடச்சுட செய்தி
சுவையான தகவல்கள்
அதைவிட ஆக்கிரமிப்பின்
கொடுமைகளை துணிந்து
செய்தியாக்கிய விதம்
இன்னும் என்னென்னவோ எல்லாம்.....

இதற்காக – நீ
எத்தனை இன்னல்களை
எதிர்கொண்டிருப்பாய்...?

உன்பணி மகத்தானது
வேண்டும் உனது சேவை
பதினெட்டாவது அகவை
நிறைந்து,
பத்தொன்பதாவது அகவையில்
காலடி பதிக்கும்
உனக்கு– எங்களது
வாழ்த்துக்கள் தொடர்ந்து
பலமாக இருக்கும்
இது உறுதி.

-எம். சுயர்சன்.

## உதயனே வாழ்க!

நிதமும் புதினம் நிறைவாய்
அளித்தெம்
இதயம் கவரும் இணையிலா
இதழாய்
பதினெட் டாண்டுப் பூர்த்தியைக்
காணும்
உதயனே! பணிதனில் உயர்ந்தே
வாழ்க!!

ப.மகேந்திரதாசன்.

## வளமுடன் வாழ்க!

உள்ளமதைக் கொள்ளையிடும்
உன்னத பணியாற்றும்
உண்மையாய் உழைத்து உயர்ந்த
உத்தமன் "உதயன்"
கள்ளமதைக் களைந் தெறிந்து
கண்ணியமாய்க் கருத்துடனே
காலத்தின் தேவையுணர்ந்து
களிப்புடனே தினமும்
மெள்ள வந்து காலையிலே
கரங்களையே அலங்கரிப்பான்
மேதினியில் அவன் சேவை
மேன்மையுற வேண்டுமென
வள்ளல் முருகனின் திருவருள்
நலம் பெற்று என்றும்
வளமுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

க.சச்சிதானந்தம்.

## வாழிய வாழியவே

பல்லாண்டு காலம் வாழ்க எங்கள் உதயனே!
பத்திரிகைத் துறையில் சாதனைகள் படைப்பவனே
சொல்லிலே சத்தியம் துலங்கிடவே
சுந்தரத் தமிழினில் செய்திகள் தருகின்றாய்
கல்வியறிவு இம்மண்ணில் பெருகிடவே
காத்திரமான விஷயங்கள் தருபவனே, வாசகரின்
நல்லாசிகள் என்றும் உனக்குண்டு
நலமாக நீ வாழிய வாழியவே!

-எம். இந்திராணி.

## "வாழிய தமிழ் உதயனே!"

நாவினில் சுவையூற்றாய்– நாளும்
நற்பணிசெய்து நற்றமிழாய்!
பூவினிதழ் புன்னகையாய் –எம்
புத்தியினில் புலர்கின்றாய்!
இதயங்களை இனிதாட்டி– என்றும்
இளையதலைமுறையின் நாளிதழாய்
உதயவானில் உருவெடுத்த "உதயனே"
உலகிடையே உயர்ந்திட வாழ்த்துகிறோம்!

அதிகாலை வேளையிலே – எங்கும்
அமைதியினைத் தந்திடுவாய்!
புதிரான புதினங்களுடன் – யாரும்
புரியாத விடயங்களை நீ தருவாய்!
வாசக நெஞ்சங்களை மகிழ்வூட்டிட – எம்
வாசல்கள் தோறும் கைகளிலே!
பேசும் தமிழில் வாழ்த்துக்கள் கூறி
பல்லாண்டுனையே வாழ்த்துகிறோம்!
என்றும் வாழிய தமிழ் உதயமே!

-என். பிறேமசீலன்.

## உதயனே! பல்லாண்டு வாழ்க!!

இந்த நிலத்தினது
நாளேடு உதயன்.
வாசக உள்ளங்களது
அறிகின்ற ஆவலையும்.
அறிவுத் தாகத்தையும்.
தீர்த்தே வைக்கின்ற
நம்மவர் நாளேடு.

அரசியல். ஆன்மீகம்
இலக்கியத்தோடு.
இன்ன பிறவுமேன்றே.
நிலத்தினது உயர்வுக்காய்
உழைக்கின்ற நாளேடு.

ஓ. உதயனுக்கு
இன்று பிறந்தநாள்.
பாமலர்களால்
பல்லாண்டு பல்லாண்டு
வாழ்க! வாழிய!!
வாழியவே!!!
என்றே வாழ்த்துக்களை
சொரிந்து நிற்கிறோம்.

மீசாலையூர் கமலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம், கச்சேரிக்கு சமீபமாக சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 17, கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 6846, 0777 631865 (25694)

### கடைகள் வாடகைக்கு

யாழ்ப்பாணம், முதலாம் குறுக்கு வீதியில் வேம்படி பாடசாலைக்கு முன்பாக இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு: சீ.சிவராஜா, இல.4, முதலாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (25118)

### விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய, பூச்சி நீக்கிய பொமனேரியன் நாய்க்குட்டிகளும் 1½ வயதுடைய கறுப்புநிற பெண் பொமனேரியன் நாயும் மற்றும் 9' அகலமுள்ள 2 சோடி கேற்றும் விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்வம், 107, டேவிட் வீதி, யாழ்ப்பாணம். (25120)

## இழப்பீட்டு விவரம் கையளிப்பு

கைதடி,நவ.27

கடந்த கால யுத்த நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட தென்மராட்சி சனசமூக நிலையங்களின் சமாசத்தில் அங்கம் வகிக்கும் 80 சனசமூக நிலையங்களின் இழப்பீட்டு விவரம் அண்மையில் சமாசச் செயலாளர் செ.ஆனந்தரஞ்சனால் ஜப்பானிய நிறுவனமான 'அமெடா'வின் சமூக அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் செல்வி சியொசிமி மற்றும் திட்ட இணைப்பாளர் கிரேயுக்கி ஒக்கா சக்கி ஆகியோரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது. (எ-75)

## கூட்டுறவுச் சங்க கிளையில் திருட்டு!

நெடுந்தீவு,நவ.27

நெடுந்தீவு பல நோ.கூ.சங்கத்தின் இரண்டாவது கிளை விற்பனை நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு திருட்டு இடம்பெற்றுள்ளது.

கடையின் ஓட்டைக் கழற்றி உட்புகுந்த திருடர்கள் அங்கு இருந்த ஒரு தொகைப் பணத்தையும் வேறும் சில பொருள்களையும் திருடிச் சென்றுள்ளனர். (எ-111)

## யார் இந்த மீனா?




## 3 மாடுகளைக் காணவில்லை

சிவந்த நிறமுள்ள, மேனியில் வெள்ளையுடைய மாடுகள் இரண்டும் (ஒரு மாட்டுக்கு வால் அறுந்துள்ளது) மண் நிறமுள்ள இரண்டு பெரிய கொம்புகளையுடைய மாடு ஒன்றும் 18.11.2003 முதல் காணாமற் போய்விட்டன. இந்த மாடுகளைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும்.

**திருமதி சித்திரா பெரியதம்பி**
(பெயின்ரர்)
52, காதி அபூபக்கர் வீதி,
முஸ்லிம் தெரு, யாழ்ப்பாணம்.
(34-12-24) (25112)

## சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

எமது கழகத்தினால் 25.11.2003 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் அடுத்த ஆண்டு 14.04.2004 இற்கு ஒத்திவைக்கப்பட்டு அன்றையதினம் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

கலை ஒளி விளையாட்டுக் கழகத்தினர்,
ஆனைக்கோட்டை.
(25116) (25-12-24)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் பணியாளரும்,
பிரபல சமூகசேவையாளரும்,
தம்பாலை ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகரும், தலைவரும்,
எமது ஊழியர் தொழிற் சங்கத்தின் முன்னாள் தலைவருமாகிய

**திரு.செல்லர் கந்தசாமி**

அவர்கள் 24.11.2003 அன்று யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அன்பரது சேவைகள் மேலும் சிறப்புற வாழ்த்துவோர்:
**பணியாளர் நலன்புரிச்சங்கம்,**
**அச்சுவேலி ப.தெ.கூ.சங்கம், அச்சுவேலி.**
(25108) (35-12-24)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாலர் பாடசாலை ஆசிரியை
செல்வி விஜயகலா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தவமணி அருணாசலம்**

அவர்களின் மறைவு குறித்து நாம் மிகவும் துயரமடைகின்றோம்.
அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து, ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*கோவில்பற்று,*
*இந்து சமய விருத்திச் சங்கம்,*
*மானிப்பாய்.* (25121) (25-12-24)

- சங்க உறுப்பினர்கள்.
மாணவர், பெற்றோர், ஆசிரியை.

## சாமியே சரணம் ஐயப்பா

உ



## யாழ். சபரீச ஐயப்பன் கோயில்
## மகரஜோதி மண்டல விரத பூஜை
## விசேட பால்குட பவனி

ஐயப்பன் அடியார்களே!

29.11.2003 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு கோண்டாவில் இருபாலை வீதியில் இருக்கும் *ஸ்ரீ பழநி ஆண்டவர் கோயிலில்* இருந்து பால்குடம் பவனி புறப்பட்டு, ஊர்வலமாக வந்து எமது ஆலயத்தில் 108 பால்குட அபிஷேகம் நடைபெறும்.

ஐயப்பன் குருமார்களும் ஏனைய சுவாமிமார்களும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- தர்மகர்த்தாவும்
பக்தர்களும்.
(25110) (34-12-24)

பிரசுர அன்பளிப்பு:
திரு.கனகசபை சுந்தரலிங்கம் (காரை மணிகண்டன்).

## உன் சிரிப்பில் சிலிர்த்து நின்றோம்



நீயும் ஒரு மெழுகுவர்த்தி தானம்மா!

**செல்வி கனாநிதி கலைவாணி திருநாவுக்கரசு**
(B.Com-M.L.I.S. Ph.D.)
உதவி நூலகர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (1991-2001)

தோற்றம் 06.03.1962 — மறைவு 27.11.2002

பிரிவால் தவித்து நிற்கின்றோம்.

(24917) UTHAYAN Graphics

## 20 ஆவது வருட நினைவுகள்

மலர்வு 1926 - 03 - 17



உதிர்வு 1983 - 11 - 27

**அமரர் தீயோ பத்திநாதன்**
(முன்னாள் வாடிவீட்டு அதிபர்)

ஈர்பத்தாண்டுகள் மறக்குமா நெஞ்சம்
நீர் பெற்ற பேறுகள் யார் பெறுவார் இங்கு?
நீர் விதைத்தவை விருட்சமாய் இன்று
விளங்குதையா பூவில் புகழுடனே
மறக்காத நெஞ்சங்கள்!

*"பவுண் அகம்"*
*நாவாந்துறை,*
*யாழ்ப்பாணம்.* (25113) (25-12-24)

- மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 47ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

ஓரடி மண்ணில் 18.09.1962 — ஆறடி மண்ணில் 12.10.2003



**அமரர் அப்புக்குட்டி உதயசீலன் (அப்பன்)**

எம் தெய்வம் எமக்கேயென்றிருந்தோம் - ஆனால்
படைத்தவன் தனக்கும் பங்குண்டென்றான்.
பாதியிலே பறித்துவிட்டான்.
மாசறியா மழலைகள் அப்பாவைக் கேட்கையில்
பதில் கூறும் பக்குவத்தை எமக்கருள்வாய் - இறைவா.

இன்று (27.11.2003) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கணேஸ்வரம்,
அளவெட்டி.

பிரிவால் துயருறும் :
குடும்பத்தினர்.

(25654) UTHAYAN Graphics

## மரண அறிவித்தல்

### இரத்தினேஸ்வரன் சுகுமார் (நிரஞ்சன்)

மண்டைதீவு, 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினேஸ்வரன் சுகுமார் 25.11.2003 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினேஸ்வரன் - கலைவாணி தம்பதிகளின் அருமை மகனும் நிமலன், சுமன், ராசன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் வரதன் (கனடா), இரத்தினேஸ்வரி (இந்தியா), புவனேஸ்வரி ஆகியோரின் மருமகனும் வில்வராஜா, லலிதா, ரஞ்சினி, தேவி (கனடா), சுசி, யமுனா ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*8 ஆம் வட்டாரம்,*
*மண்டைதீவு.* (25109) (25-12-24)

தகவல்:
இரத்தினேஸ்வரன்
(தந்தை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் நாள் - 2003



நவம்பர் 27

## சரித்திர வீரர் கனவு பலிக்கும்

வெற்றியின் வித்துக்களே
பற்றியெரிந்த விடுதலைத் தீயாய்
செற்றாரின் செருக்கழித்த
கொற்றவையின் குழந்தைகளே

சுற்றத்தோடு உறவுகள் கூடியிங்கு
பற்றோடு நின்பதம் பணிந்தோம்
சற்றே விழி திறந்து
சாற்றுவதைக் கேட்டிடுவீர்

சுற்றி முளைத்த தடை அழியும்
முற்றம் சிரிக்கும் முரசொலிக்கும்
கத்தும் கடல் கைக்கொட்டும்
சரித்திர வீரர் உம் கனவு பலிக்கும்.

தமிழீழ வைப்பகம்
தமிழரின் காப்பகம்

(சி-31534)(31-16-17)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 529 |
| திகதி | 25.11.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4354820-4369473

வெற்றி இலக்கங்கள் **18 28 49 51**

லக்கினம் மகரம்



ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்படவில்லை.

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,723,100/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 323,616 | 10 | 3,236,160 |
| 2 இலக்கங்கள் | 29,803 | 20 | 596,060 |
| 1 இல + லக்கினம் | 29,579 | 30 | 887,370 |
| 2 இல + லக்கினம் | 2,637 | 100 | 263,700 |
| 3 இலக்கங்கள் | 789 | 500 | 394,500 |
| 3 இல + லக்கினம் | 80 | 5,000 | 400,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 386,508 | - | 6,177,790 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.6,177,790/-

தொடர் இல. 5344718க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 நவம்பர் 28ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**4360228-3-09**
**4358585-5-20**
**4357289-6-81**
**4358486-2-60**
**4367083-9-09**

PHOENIX O&M


# மாவீரர் தினத்தை முன்னிட்டு

மாவீரர் குடும்பங்களுக்கான விசேட விலை (01.01.2004 வரை மட்டும்)

**107,000/=**

Libero ~~115,000/=~~

விசேட விலைக்கழிவில் **110,000/=**

# YAMAHA

2 வருட உத்தரவாதம்

யாழ்ப்பாணத்திலும் உங்களுக்காக....!

- அதி நவீன தொழில் நுட்பங்கள்
- மிக உயர்ந்த தரம்
- மிகச் சிறந்த பாதுகாப்பு
- வியக்க வைக்கும் சொகுசு
- மிகக் குறைந்த எரிபொருள் பாவனை
- கவர்ச்சிகரமான அமைப்பு




மோட்டார் சைக்கிள் வாங்குபவர்களுக்கு
ஒரு "CASTROL" OIL CAN
கவர்ச்சியான ஜக்கெற்
ஒரு சோடி கிளவுஸ்
3 சேர்விஸ்கள்
இலவசம்



UTHAYAN Graphics

Visit our Web Page :
yamahaplaza.com

சகல விதமான யமஹா உதிரிப்பாகங்களையும் இம்போட்டட் ஹெல்மெட், ஜக்கெட் வகைகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

யமஹா பிளாஸா
YAMAHA PLAZA

298, K.K.S. ROAD, JAFFNA.
TEL: 0777 198000
0777 563803


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினருக்கு அமைச்சர் பதவிகள் வழங்கவே தேசிய அரசு

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு,நவ.27

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் தேசிய அரசு ஒன்றை உருவாக்கும் நடவடிக்கை அரசியலில் தற்போது நிலவும் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது.

அமைச்சரவையை மேலும் விஸ்தரித்து பொ.மக்கள்.மு. தரப்புக்கு அமைசுக்களை வழங்கும் ஏற்பாடாகவே அது அமையும்.

பிரதான கட்சிகள் இரண்டும் முக்கியப் பிரச்சினைகளின்போது, இணக்கப்பாட்டுடன் செயற்படுவதே இன்றைய நடைமுறைக்குச் சாத்தியமான தீர்வாக அமையும்.

அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் நிலைமை குறித்து இலங்கையில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்குத் தெளிவுபடுத்தும் முகமாக கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாகக் கடந்த சில தினங்களுக்குமுன் யோசனைகள் முன்மொழியப்பட்டன. எனினும், இந்த யோசனைகளைத் தற்போது நிலவும் பிரச்சினைகளுக்குச் சிறந்த தீர்வாகவோ, முறையாகக் கவனம் செலுத்தும் செயற்பாடாகவோ நாம் கருதவில்லை.

ஏனெனில், தேசிய அரசு என்பது மேலும் புதிய அமைச்சுக்களை ஏற்படுத்தி அவற்றை பொ.ஐ.மு. உறுப்பினர்களுக்கு வழங்கும் ஏற்பாடாகும். இதனால், அமைச்சரவை மேலும் விஸ்தரிக்கப்படும்.

இது தற்போது நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொடுகாது, அப்பாவிப் பொதுமக்கள் மீது மேலும் வரிச்சுமையை சுமத்தும் செயலாக அமையும்.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமானால், அவற்றுடன் தொடர்புடைய சகல அதிகாரங்களும் பிரதமருக்கு இருக்க வேண்டும். இதனைப் பிரதமர் தெளிவாகக் கூறியுள்ளார்.

இதுவே போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும்போது ஏற்படுத்திக் கொண்ட அடிப்படை இணக்கப்பாடும் ஆகும்.

- இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

(ஒ)




**QUICK STAR TAILORING**
**FAST COMMUNICATION**
**குயிக் ஸ்ரார் ரெயிலறிங்**
**பாஸ்ட் கொமினிக்கேசன்**

*7வருடங்களை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து புதுப்பொலிவுடன் 8ஆவது வருடத்தில் இன்று காலடி பதிக்கின்றோம் என்பதை அறியத் தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.*

❖ மிகக்குறைந்த கட்டணத்தில் 24 மணிநேர தொலைபேசிச் சேவை
❖ குயிக் ஸ்ரார் தையலகம்

கொழும்பு - யாழ்;- யாழ். - கொழும்பு விமானப் பயணச்சீட்டு முற்பதிவுகள்

எமது 7ஆவது அகவையின் மற்றுமொரு சேவை

பாஸ்ட் ஸ்ருடியோ அன் கலர் லாப் Fast Studio and Colour Lab

☞ சகலவிதமான புகைப்படச் சுருள்களையும் சகல அளவுகளிலும் ஒரு மணி நேரத்தில் பிரதியாக்கிப் பெற்றுக்கொள்ளலாம்.

☞ உட்புற, வெளிப்புற படப்பிடிப்புக்களுக்கு முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்.

*எமது வளர்ச்சிக்கு உறுதுணையாகவிருந்த அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்!*

392, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (C/31524) (26-15-15-21)
☎ 021 222 5894
021 222 2591



## கண்ணீர் அஞ்சலி



*தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையில் சேவைபுரிந்த*

அமரர் **கந்தசாமி நித்தியானந்தன்**

அவர்களின் மறைவு எமக்கு பேரிழப்பாகும். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை வடபிராந்திய தொழிற் சங்க ஊழியர் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

வடபிராந்திய தொழிற்சங்கம்.
தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை.
யாழ்ப்பாணம்.

(25125)(34-15-21-16)



## 45ஆம் நாள் நினைவஞ்சலி

மண்மகிழ 09 - 09 - 1988



கண்நெகிழ 15 - 10 - 2003

அமரர் **தர்மலிங்கம் றஜிந்தகுமார்**

(மாணவன், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

நற்பெயரும் கொண்டீர்
நல்லவரையும் கண்டீர்
நற்செயலிலும் நின்றீர் - இன்று
நம்மை விட்டுச் சென்றீர்
மௌனமாகிப் போகலாம்
உங்கள் அசைவுகள் - ஆனால்
மரணமாகிப் போவதில்லை
உங்கள் நினைவுகள்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் பிரிவால் வருந்தும்:
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.

*கல்வளை வீதி,*
*சண்டிலிப்பாய்.*
(சி-31522) (25-15-16-21)



## விற்பனைக்கு

புதிய Wega Model Ha21 Sony 14", 21" T.V.கள் (Sterio) விற்பனைக்குண்டு.

*தொடர்பு:*
இல.15/40, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

(25124)


## புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் இலக்கம் 6 விடைகள்

### வினாத்தாள்-1 விடைகள்

| | | |
|---|---|---|
| 1. 2 | 2. 1 | 3. 1 |
| 4. 3 | 5. 3 | 6. 2 |
| 7. 2 | 8. 2 | 9. 2 |
| 10. 3 | 11. 3 | 12. 3 |
| 13. 3 | 14. 2 | 15. 2 |
| 16. 1 | 17. 4 | 18. 3 |
| 19. 2 | 20. 2 | 21. 2 |
| 22. 2 | 23. 1 | 24. 3 |
| 25. 4 | 26. 2 | 27. 1 |
| 28. 2 | 29. 3 | 30. 2 |
| 31. 1 | 32. 3 | 33. 1 |
| 34. 2 | 35. 2 | 36. 1 |
| 37. 3 | 38. 2 | 39. 3 |
| 40. 3 | | |

(40x2½=100புள்ளிகள்)

### வினாத்தாள்-2

01. இராப்பொழுது/மாலை இருள் சூழும் போது.
02. நட்சத்திரம்/விண் மீன்கள்.
03. சந்திரன்/பிறைச்சந்திரன்
04. வானம் 05. ஆம்பல்
06. தாமரை, கமலம், பங்கயம்
07. மனம், அகம்
08. மலர்ச்சி, செழிப்பு
09. இறுக்கம்
10.11. ஓடி, வாடி, கண்டு
12. மீன் + இனம்
13. ஓடம் + ஒன்று
14. Sky 15. Sea
16. Mother 17. Moon
18. 11 500g 19.140ரூபா
20. 12 ரூபா 21.30ரூபா
22. 30 ரூபா 23.250g
24. 30 ரூபா 60 சதம்
25. ஆயிரத்து எழுநூற்றைம்பது ரூபா
26. Kg 27. m
28. நுளம்புத்திரி
29. உடல் ஒலிபெருக்கி
30. கஸ்பர்வீல்
31. ஒலிபெருக்கி
32. வெசாக் கூடு
33-38. பொருத்தமான இடங்களில் குறித்தல்
39. ✓ 40. ✓ 41. ✗
42. ✓ 43. ✗ 44. ✓
45. கவ்வாத்து
46. தூக்குக்குண்டு
47. பற்சில்லு
48. எரிபொருள்
49. மின் உற்பத்தி
50. காற்றுத் திசைகாட்டி
51. 1.குளிர்பானம் உறுஞ்சு குழாய்கள் 2 அல்லது அறுகம்புல் தண்டு
   2. தடித்த கடதாசி அட்டை
   3. தக்கை
   4. குண்டூசி
   5. சதுரவடிவத்தாள்
52. 108 53. 4 54. 1.4
55. 3 56. பி.ப 1.15
57. தாலாட்டு
   ஒப்பாரி
   தெம்மாங்கு
   தொழிற்பாடல்
58. கிட்டிபுள்
   சடுகுடு
   எல்லே
   வாரோட்டம்
59. சுசந்திக்கா ஜெயசிங்க
60. குறிக்குச்செல், ஆயத்தமாகு, செல்(போ, ஓடு)
61. சதுரங்கம், பூப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம், கரம்.
62. மீன்முள்ளுத்தையல்
63. வெட்டுக்குத்துதையல்
64. கதிரை, පුටුව
65. நூல்நிலையம், පුස්තකාලය
66. கோப்பி, කෝපි
67. மாம்பழம், අඹ
68.மரங்கள், ගස්
69-74. பொருத்தமான கருத்துள்ள வசனங்கள்.

### புள்ளித் திட்டம்:-

வினாத்தாள்-I

| | | | |
|---|---|---|---|
| 1 - 17 | ⇨ | 17 | புள்ளிகள் |
| 18 - 25 | ⇨ | 16 | புள்ளிகள் |
| 26 - 27 | ⇨ | 2 | புள்ளிகள் |
| 28 - 49 | ⇨ | 23 | புள்ளிகள் |
| 50 - 51 | ⇨ | 5 | புள்ளிகள் |
| 52 - 56 | ⇨ | 5 | புள்ளிகள் |
| 57 - 61 | ⇨ | 8 | புள்ளிகள் |
| 62 - 63 | ⇨ | 2 | புள்ளிகள் |
| 64 - 68 | ⇨ | 10 | புள்ளிகள் |
| 69 - 74 | ⇨ | 12 | புள்ளிகள் |
| | | 100 | |

## கரம்பைக்குறிச்சியில் இயங்கிய

# கசிப்பு உற்பத்தி நிலையம் பொலீஸாரால் சுற்றிவளைப்பு

தென்மராட்சி,நவ.27

வரணி, கரம்பைக்குறிச்சியில் இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் கொடிகாமம் பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

இப்பகுதியில் பொலீஸார் மேற்கொண்ட திடீர்சோதனையின் போது கசிப்பு குகை கண்டுபிடிக்கப்பட்டு அங்கிருந்து 32டிராம் கசிப்பினையும், கசிப்பு உற்பத்தி உபகரணங்களையும் கைப்பற்றிய பொலீஸார் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

இதுவிடயமாக வல்லிவீமன் என்பவரை கடந்த திங்களன்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்தபோது, சந்தேகநபர் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனை அடுத்து நீதிவான் பா.சுப பிரமணியம் தீர்ப்பு வழங்குவதை நாளை வெள்ளிக்கிழமை வரை ஒத்தி வைத்தார்.

அத்துடன், இவ்வழக்குடன் தொடர்புடையதாகக் கருதப்படும் சகாதேவன் ரதீபன், மார்க்கண்டு வினோக் ஆகியோரை நாளை வெள்ளியன்று நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பு அனுப்புமாறு பதிவாளரை நீதிவான் பணித்தார்.

(எ-117)


## *கண்ணீர் அஞ்சலி*

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு விட்ட
எமது அன்புக்குரிய சகமாணவன்

செல்வன் **தர்மகுலசிங்கம் வசந்தகுமார்**

அவர்களின் மறைவு எமக்கு மிகுந்த வேதனையை அளிக்கின்றது. அவரது மறைவால் துயரப்படும் உறவினர்களுக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மசாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கனகரட்ணம் ம.ம.வி.,
யாழ்ப்பாணம். (25111) (26-15-16-21)

ஆசிரியர்கள், மாணவர்கள்,
உயர்தர கலைப்பிரிவு.



## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**நாகேசு தம்பிமுத்து**



*அன்னை மடியில்* 30.10.1923
*இறைவன் அடியில்* 11.12.1999

அன்று எம்முடன் வாழ்ந்து மறைந்தீர்கள்
- ஐயா
இன்று மறைந்தாலும் எம்முடன்
வாழ்கின்றீர்கள்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*இல.15, யாழ்பாடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(25128)(25-12-16-21)



## ஆத்மார்த்த அஞ்சலி



**துரையப்பா பத்தர் இராஜகோபால்**

மறைவு: 26.11.2003

கன்னாதிட்டி வாழ் விஸ்வகுல வம்சம் தனில்
வந்துதித்த - மாணிக்கமே!
நீதியும் நேர்மையும் வழுவாது குலப்பெருமை
காத்து வாழ்ந்த - வைரமே!
நெஞ்சில் வஞ்சமில்லா வெள்ளை மனம் கொண்ட
- முத்தே!
அம்பாளின் சபைதனில் இனிய பண்ணிசை பாடிய
- புஸ்பராகமே!
கடுஞ்சொல் கூறாத பசுமையான மனம் கொண்ட
- மரகதமே!
நூலிழை பிசகா நேர்மை வாணிபம் செய்த
- வைடூரியமே!
பெருங்கடல் மனம் கொண்டு அம்பாளின் சேவைக்கு
அர்ப்பணித்த - நீலமே!
பவளக்கால் தனைப் பொருத்தி சித்திரத்தேரில்
அம்பாள் ஆரோகணிக்க முன்னின்று
உழைத்த - பவளமே!
சபைதனில் பாராட்டும் புகழும் எதிர்பார்க்கும்
இவ்வுலகில் படாடோபமற்ற வாழ்வுக்கு ஒரு
- கோமேதகமே!
சொந்த உன் மைந்தனாய்
உந்தனின் தொண்டனாய்
வாழ்ந்த எங்களின் அன்புடைத் தலைவனின்
ஆத்மா உந்தனின் பொற்பாத கமலங்களில் சேர
எங்களின் கண்ணீர்ப் பூக்களினால்
அஞ்சலி செய்கின்றோம்.
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

ஆதீன கர்த்தாக்கள்,
கன்னாதிட்டி காளி அம்பாள் தேவஸ்தானம்.

(25127)(34-12-21-16)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண நாள் ஒத்திவைக்கப்பட்டது

யாழ். கன்னாதிட்டி
துரையப்பாப்பத்தர் வேனுகோபால்
கனகவல்லி தம்பதிகளின் புதல்வன்
**செல்வம்**
அவர்களுக்கும்

யாழ். சோனக தெரு
தம்பித்துரை அருணபாலன்
ஜெயமணி தம்பதிகளின் புதல்வி
**நிரஞ்சலா தேவி**
அவர்களுக்கும்

நாளை (28.11.2003) வெள்ளிக்கிழமை காலை நல்லை ஆதின கலா மண்டபத்தில் நடைபெறவிருந்த திருமண வைபவமானது தவிர்க்க முடியாத காரணத்தால் பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் மனவருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

திருமணத் திகதி பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

(இருவீட்டார் அறிவிப்பு) மணமக்களின் பெற்றோர்,
யாழ்ப்பாணம்.

(25134)(18-12-31)

## கல்வியாண்டு-2004

தரம் 1 முதல் O/L வரை
தரம் 5 மாணவர்களுக்கான
புலமைப்பரிசில் வகுப்பு~2004

**புதிய வகுப்புகள் ஆரம்பம்:**
**29-11-2003 சனி காலை 8.30 மணி**

- எமது வழமையான SUPER GRADE ஆசிரியர் குழு
- புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**நாவலி**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(25092) (32-18-12-31)

## 13ஆவது ஆண்டு நினைவு அலைகள்

மண்ணில் 23 . 03 . 1923



விண்ணில் 27 . 11 . 1990

**அமரர் பொன். ஐயம்பிள்ளை**
(ஓய்வுபெற்ற ஆசிரியர், வலந்தலை, காரைநகர்)

"நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது" *சங்கீதம்:97-11*

என்றும் மாறா நினைவுடன் - குடும்பத்தினர்.

*56, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.*

(25135)(31)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் தனராசாவின் அன்புத் தந்தையார்

**கிருஷ்ணபிள்ளை தருமராசா**

அவர்களின் 26.11.2003 மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொறியியல் பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.
2 ஆம் வருட மாணவர்கள் (E/01)
(25138)(18-12-31)

## கண்ணீர் அஞ்சலி



எமது உறவினரும் கன்னாதிட்டி வாசியுமான

**துரையப்பாப்பத்தர் இராஜகோபால்**

அவர்களின் மறைவு எமக்கு மிகுந்த பேரிழப்பாகும். அவரது பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அமரருக்கு கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

*யாழ்ப்பாணம்.* (25133)(18-12-31)
மேசியா நகைமாடம்
உரிமையாளரும் ஊழியர்களும்.

## கண்ணீர் அஞ்சலி



சுகந்தா ஆனைப்பந்தி வைத்தியசாலையில் நீண்டகாலம் தாதியர் தலைமைப் பொறுப்பாளராக சேவை புரிந்தவரான

**செல்வி வைத்திலிங்கம் இராசமணி**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது சகோதரர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

395, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (25130)(18-12-31)
நா.குணரத்தினம்
உரிமையாளர் (வைத்தியசாலை)
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்

### இராசமணி வைத்திலிங்கம்

(தலைமைத் தாதி, தனியார் வைத்தியசாலை ஆனைப்பந்தி)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசமணி வைத்திலிங்கம் 26.11.2003 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் பாக்கியரத்தினத்தின் பாசமிகு சகோதரியும் வீரசிங்கத்தின் மைத்துனியும், சுதர்ஷணன் (கனடா), சுதாகர் (கனடா), சரவணன், சஞ்சீவ் (கொழும்பு, சரவணா போட்டோ) ஆகியோரின் பெரிய தாயாரும் பிரியதர்ஷினியின் மாமியாரும் லக்ஷனா, திலக்ஷன் ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் நேற்று (26.11.2003) புதன்கிழமை கொழும்பு கல்கிசை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*தொடர்பு: 0777 325447*
*0777788832*
தகவல்:
திரு. திருமதி வீரசிங்கம் குடும்பம்.

## காரைநகரில் கட்டுரை போட்டி

காரைநகர் பாடசாலை மாணவர்களுக்கிடையே, கனடா காரை கலாசாரமன்றம் நடத்தும் கட்டுரைப் போட்டி நாளை நடைபெறவுள்ளது. மேற்பிரிவு, மத்தியபிரிவு, கீழ்ப் பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறும் இக்கட்டுரைப் போட்டியில் காரைநகரில் உள்ள ஏழு பாடசாலைகளின் மாணவர்கள் பங்குபற்றுகின்றனர்.

காரைநகர் சுப்பிரமணியம் வித்தியாலயத்தில் இப்போட்டி நடைபெறவுள்ளது. (ஐ-73)

## மரண அறிவித்தல்கள்

### நானுனாயகர் கமலாம்பிகை

நல்லூர், முத்திரைச் சந்தியைவசிபபிடமாகக் கொண்டவரும் தற்போது இந்தியாவில் வசித்து வந்தவருமாகிய நானுனாயகர் கமலாம்பிகை நேற்று (26.11.2003) புதன்கிழமை இந்தியாவில காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-ஆச்சிப்பிள்ளை ஆகியோரின அன்பு மகளும் காலஞ்சென்ற நானுனாயகரின் அருமை மனைவியும் கெங்கேஸ்வரி (இந்தியா), லோகப்பிரகாஸ் லான்மாஸ்ரர் மெக்கானிக், முத்திரைச்சந்தி), விஜயகுமார் (ஜேர்மனி), ராஜேஸ்வரி(இந்தியா), சௌந்தராஜன், (பிரான்ஸ்), சுந்தர்ராஜன் (ஜேர்மனி),ஜெயராஜ் (அமரர்), குலேந்திரன் (பிரான்ஸ்), கமலராஜன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும பரமநாதன (லண்டன்), கலாநிதி (முத்திரைச் சந்தி), லதா (ஜேர்மனி), சுந்தர்லிங்கம் (கொழும்பு), லோகரஞ்சினி(பிரான்ஸ்),கஸ்தூரி (ஜேர்மனி), சூரியா (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.11.2003) வியாழக்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:கலா
(மருமகள்)
(25146)
860,பருத்தித்துறை வீதி,
நல்லூர்.யாழ்ப்பாணம்.

### இரத்தினம் பாலச்சந்திரன்

(இளைப்பாறிய எழுது வினைஞர்)

பண்டத்தரிப்பு, செட்டி குறிச்சியைச் சேர்ந்த இரத்தினம் பாலச்சந்திரன் அவர்கள் நேற்று (26.11.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2003) வியாழக் கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செட்டி குறிச்சி,*
*பண்டத்தரிப்பு.*
தகவல்:
ஜே.ஜோஜ் ஜெயபாலன்
(மருமகன் - ஆசிரியை,
சங்கானை சிவப்பிரகாச
மகா வித்தியாலயம்).
(சி-31537)(31-18-17)

## விற்பனையாகின்றது

முற்றிலும் எதிர்பார்க்கும்

**O/L English**

மாதிரி வினாத்தாள், கடந்த வினாத்தாள் (2001,2002)
விடைகளுடன
தொகுப்பு -த-தனேந்திரன்
B.Com (Hons), m.m.spl, H.N. Dip.in.Acc
பகுதி நேர விரிவுரையாளா (English)
தொழில்நுட்பக் கல்லூரி
புபாலசிங்கம். சுப்பிரமணியம். ஸ்ரீலங்கா.
துர்க்கா (சுன்னாகம்)
(25143)(32)

## தேவை

பிரபல கல்வி நிறுவனமான

**நேஷயன்ந்**

(அரியாலை)
இல் கடமை புரிய பின்வருவோர் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.


1. Clerk
2. Teachers

தகுதியும் திறமையும் மிக்க அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

30.11.2003 ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு நேரில் வரவும்.

இடம்:
அரியாலை
[illegible]
[illegible]
(25[illegible]-18-31)


**Industrial Ventilating Fan**



**ஜெனரல் இக்விப்மன்ட்ஸ் லிமிட்டட்**

316,400, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2345046, 2327264, 2343822,
2343823, 2430799 பக்ஸ்: 2434637.


## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு ஐயாத்துரை

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஐயாத்துரை அவர்கள் நேற்று (26.11.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் மகனும் காலஞ்சென்ற சின்னம்மாவின் சகோதரனும் காலஞ்சென்ற ராமு - சின்னத்தங்கம் ஆகியோரின் மருமகனும் இராசமணியின் அன்புக் கணவரும் நேசமணி, துரைராசா (கனடா), ஞானமணி (புத்தளம்), செல்வமணி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற திருமூர்த்தி, தேவி (கனடா), இராசரத்தினம் (சவூதி), ஜெயக்குமார் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரமேஸ்கரன், கபிலன் (கனடா), அரோஜன், அனுஷா, சாருஜன் (புத்தளம்), கீர்த்தனா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2003) வியாழக்கிழமை பி.ப.3 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்ரேசன் றோட்,*
*கோண்டவில்.* (சி-31536)(31-12-18)
தகவல்:
ஐ.துரைராசா (மகன்).

### பொன்னர் நாகமுத்து

புத்தூர் கிழக்கு, குமாரசாமி வீதியைச் சேர்ந்த பொன்னர் நாகமுத்து நேற்று (26.11.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நாகமுத்து தெய்வானையின் அன்புக் கணவரும் பொன்னர் - தம்பு, சின்னக்குட்டி- சின்னம்மா, காலஞ்சென்ற மாணிக்கம் - இலட்சுமி ஆகியோரின் அருமைச் சகோதரனும் P.N. செல்லத்துரை (கிராம அலுவலகம் இருபாலை கிழக்கு) மாணிக்கம் - பார்வதிப்பிள்ளை, தம்பிஐயா - இராசம்மா, இரத்தினசிங்கம் - செல்லம்மா, சபாரத்தினம் - தங்கம்மா, சுப்பிர மணியம் - நல்லம்மா ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தர் தம்பிஐயா, வேலுப்பிள்ளை சபாரத்தினம், பொன்னர் சுப்பிரமணியம், புஸ்பராணி - செல்லத்துரை, காலஞ்சென்ற மாணிக்கம் சோமசுந்தரம், இரத்தினசிங்கம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2003) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப.2 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிழக்கு அந்தரானை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமாரசாமி வீதி,*
*புத்தூர் கிழக்கு.* (25132)(18-12-31)
தகவல்:
P.N.செல்லத்துரை
(மகன் - கிராம அலுவலர். இருபாலை கிழக்கு).

### அப்பாத்துரை நவரத்தினம் (சங்கிலிக்காரன்)

குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை நவரத்தினம் அவர்கள் நேற்று (26.11.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கனகம்மா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அப்பாத்துரை இராசம்மா அவர்களின் மூத்த மகனும், காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை - அன்னப்பிள்ளை அவர்களின் மருமகனும், சின்னத்துரை, இரத்தினம்மா, பரிபூரணம், சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும் சபாரத்தினம் காலஞ்சென்ற பழநி, ஆறுமுகம் மற்றும் நல்லையா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2003) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமரகோட்டம்,*
*கோண்டாவில்.* (25131)(31-12-18)
தகவல்:
கனகம்மா (மனைவி).

### குழந்தை தர்மலிங்கம்

(EY - 33xx கார் உரிமையாளர்)

சத்திரங்கை, கம்பர்மலை, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குழந்தை தர்மலிங்கம் அவர்கள் 26.11.2003 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் வடிவேலின் சகோதரரும் கமலாவின் அன்புக் கணவரும், மோகனதாஸ் (பிரான்ஸ்), மௌனதாஸ் (பிரான்ஸ்), பகீரததாஸ் (பிரான்ஸ்), மோகனரஞ்சினி, பிருந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் கருணாகரன், காஞ்சனா, சுஜகலா, மாலினிதேவி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2003) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

*சத்திரங்கை,*
*கம்பர்மலை,*
*வல்வெட்டித்துறை.* (25140)(31-12-18)
தகவல்:
த.கமலா (மனைவி).

### கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

நெட்டிலிப்பாய், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம் 24.11.2003 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - இராசம்மாவின் அன்பு மகனும், குலமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சபாபதி, கனகலட்சுமி, மனோன்மணி மற்றும் ஞானசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுமதி (ஆஸ்திரேலியா), வதனி (மருத்துவர் திருகோணமலை பொது வைத்தியசாலை), ரஜனி (அமெரிக்கா), ரமணி (லண்டன்), தர்ஸினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதீஸ், சிவகுமாரன், ஸ்ரீஸ்கந்தராஜா, துளசிதரன் ஆகியோரின் அன்பு மாமனும் துவாரகன், சாருஜா, நிரோமி, ஆதவன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2003) வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் இணுவில், கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பாடசாலை வீதி,*
*கோண்டாவில் மேற்கு.* (25142)(31-12-18)
தகவல்:
க.ஞானசேகரம்
(சகோதரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சு மூலம் தீர்வு காண்பதில் பிரபா உறுதி: கொழும்பு திரும்பிய கிறிஸ் பெட்டன் தெரிவிப்பு

கொழும்பு,நவ.27

இலங்கையில் மீண்டும் ஒரு யுத்தம வெடிக்கும் என்று எவரும் அச்சப்படவேண்டிய அவசியமே இல்லை. பேச்சுக்களின் மூலம் இனப்பிரச்சினைக்கு உறுதியான ஒரு தீர்வு ஏற்படுத்தப்படவேண்டும் என்பதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரன் மிகவும் உறுதியாகவே இருக்கிறார்.

பிரபாகரனைச் சந்தித்துவிட்டு கொழும்பு திரும்பிய ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு ஆணையாளர் கிறிஸ்தோபர் பெட்டன் இவ்வாறு செய்தியாளர்களிடம் கூறினார்.

புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்தபின் கிறிஸ்தோபர் பெட்டன் நேற்றுமாலை கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் மேலும் கூறியதாவது:-

பிரபாகரனை நேரில் சந்தித்தபோது முக்கியமான நான்கு விடயங்களை நான் அவரிடம் வலியுறுத்தினேன்.

★ கடந்த காலங்களில் இடம்பெற்ற கசப்பான சம்பவங்கள் அனைத்தையும் மறந்து, இனி நடைபெறவிருக்கும் சமாதான முன்னெடுப்புகளில் தீவிர அக்கறை கொள்ள வேண்டும்.

★ யுத்தநிறுத்த ஒப்பந்தம் இறுதி வரை உறுதியாகக் கடைப்பிடிக்கப்படவேண்டும்.

★ ஒற்றை ஆட்சியின் கீழ் சமஷ்டி முறையில் நிரந்தரத் தீர்வுக்கு உடன்படவேண்டும்.

★ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளும் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வது தொடர்பாகக் காலம் தாழ்த்தாமல் ஒரு தீர்மானம் எடுக்கவேண்டும்.

- இவற்றை பிரபாகரனிடம் வலியுறுத்தினேன்.

இவ்விடயங்கள் அனைத்தும் மிகவும் நுணுக்கமாகவும் நல்லெண்ணத்துடனும் பரிசீலனை செய்யப்படும் என பிரபாகரன் என்னிடம் உறுதி அளித்தார்.

பிரபாகரன் என்னிடம் கூறிய அனைத்து விடயங்களையும் நான் இங்கு வெளிப்படையாகக் கூறமுடியாது. அப்படி நான் கூறினால் நான் ஓர் இராஜதந்திரியாக இருக்கமுடியாது.

கொழும்பில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட பல்வேறு அரசியல்வாதிகளையும் புத்திஜீவிகளையும் சந்தித்தேன். அவர்களும் கூட இனப்பிரச்சினைக்குப் பேச்சு மூலமே தீர்வு காணமுடியும் என்ற கருத்தையே வெளிப்படுத்தியுள்ளனர்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு சமாதானத்தீர்வு ஏற்படவேண்டும். அதற்குத்தேவையான சகல உதவிகளையும் வழங்க சர்வதேச சமூகமும், ஐரோப்பிய ஒன்றியமும் தயாராகவே உள்ளன. நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும்; அனைத்து பிரஜைகளும் சமமாகவும் சுதந்திரமாகவும் வாழவேண்டும் என்பதே ஐரோப்பிய ஒன்றியத்தின் குறிக்கோள்.

புலிகள் மீது சில குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டுள்ளன.

மாற்று அரசியல்வாதிகளைக் கொலை செய்தல், கப்பல் - வரி வசூலித்தல், சிறுவர்களைக் கட்டாயமாகப் படையில் சேர்த்துக்கொள்ளுதல் என்பன அவற்றில் சில. இவை அனைத்தும் நிரூபிக்கப்படுமேயானால், இன்று புலிகள் இயக்கத்திற்கு சர்வதேச அரங்கில் உள்ள கௌரவத்திற்கு அபகீர்த்தி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் மீள் கட்டமைப்புப் பணிகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் கைகொடுத்து உதவும். ஆனால், இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக இங்கு நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் அதற்கு அமைதித் தீர்வு கிட்டுவது அவசியம்.

புலிகள் முன்வைத்துள்ள சமஷ்டி முறையை நான் எனது வாழ்நாளில் இப்போதுதான் முதன் முறையாகக் காண்கிறேன். இந்த வரைவினால் சமாதானப் பேச்சுக்களில் சிறிது தாமதம் ஏற்பட இடமுண்டு - என்றார் கிறிஸ் பெட்டன்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் உங்களிடம் வெளிப்படுத்தியவை நேர்மையானவையாகவும் உறுதியானவையாகவும் உள்ளன என்று நீங்கள் நம்புகிறீர்களா?- எனச் செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

"இதைப்பற்றி நான் நேரடியாகக் கருத்துக் கூறமுடியாது. ஆனால், மீண்டும் யுத்தம் புரிவதை அவர் விரும்பவில்லை. பேச்சுக்களின் மூலம் நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்பதிலேயே அவர் மிகமிக உறுதியாக இருக்கிறார் என்பதை உணரமுடிந்தது" என்று பதிலளித்தார் கிறிஸ் பெட்டன்.

கடுமையான எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் நீங்கள் பிரபாகரனைச் சந்தித்ததன் நோக்கம் என்ன? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

"கூடிய விரைவில் பாதிக்கப்பட்ட வடபகுதியில் இருந்து கூடுதலான மாணவர்கள் பாடசாலைக்கு செல்வார்கள். அதிகமானோர் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்படுவார்கள். கண்ணிவெடிகளற்ற சுதந்திர பூமியை அந்த மக்கள் காண்பார்கள். அதுதான் எனது விஜயத்தின் நோக்கம்" - என்று கிறிஸ் பெட்டன் கூறினார். (ஐ)

## சடலங்கள் தோண்டி எடுத்து பரிசோதனை

காரைநகர்,நவ.27

காரைநகர் மேற்கில் கடந்த 18ஆம் திகதி தந்தை ஒருவர் தனது மூன்று பெண்குழந்தைகளுடன் கிணற்றினுள் பாய்ந்த சம்பவத்தில் உயிரிழந்த மூன்று குழந்தைகளினதும் உடல்கள் நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் அ.பிறேம்சங்கர் முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனை செய்யப்பட்டன.

காரைநகர் மேற்கைச் சேர்ந்த ம.வேதநாயகம் (வயது-32) என்பவரே தனது குழந்தைகள் மூவரையும் கிணற்றில் வீசிவிட்டு தானும் தற்கொலை செய்ய முயன்றார். எனினும் அவர் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டார். அவரது பிள்ளைகளான வே.வினோதினி (வயது-5), வே.யதுசாளினி (வயது-4), வே.கீர்த்தனா (8 மாதங்கள்) ஆகிய மூவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

மூவரது சடலங்களும் காரைநகர் திலலை மயானத்தில் புதைக்கப்பட்டிருந்தன. நேற்று நீதிமன்றக் கட்டளைப்படி அச்சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் அவை மீண்டும் புதைக்கப்பட்டன.(ஐ.9-73)

## தமிழீழ நீதித்துறையினருடன் கண்காணிப்புக் குழுவினர் சந்திப்பு

கிளிநொச்சி,நவ.27

தமிழீழ நீதி நிர்வாக நடைமுறைகள் பற்றி அறிந்துகொள்ளும் நோக்குடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆலோசகர்கள் இருவர் நேற்று தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பராவைச் சந்தித்து பேசியுள்ளனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமையகத்தின் வேண்டுகோளுக்கிணங்க நேற்றுக் காலை 9.30 மணிமுதல் 12.30 மணி வரை கிளிநொச்சியில் அமைந்துள்ள நீதி நிர்வாகத் துறையின் நடுவப் பணியகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் சட்ட ஆலோசகர்களான றொம்மி வில்லியனன். ஒலி சென்றானன் ஆகியோரும் தமிழீழ நீதி நிர்வாகத்துறையின் சார்பில் பொறுப்பாளர் பரா, தலைமை நீதியாளர் ஒப்பிலான், மேன்முறையீட்டு முதன்மை நீதியாளர் சுகிதரன், தமிழீழ சட்டவாக்கப் பொறுப்பாளர் கா.வே.நிக்ஸன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தமிழீழ நீதி நிர்வாக நடைமுறைகள் பற்றி விரிவான விளக்கமொன்றை நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா வழங்கினார்.

இதனையடுத்து, கண்காணிப்புக் குழுவின் ஆலோசகர்கள் கிளிநொச்சியில் உள்ள தமிழீழ நீதிமன்ற வளாகத்திற்குச் சென்று மாவட்ட நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றைப் பார்வையிட்டனர். (ஐ-8)

## மிருசுவிலில் பயிற்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீரின் அடியில் காணப்பட்ட சகதி நிறைந்த பெரும் துரவு ஒன்றினுள் சில சிப்பாய்கள் சிக்குண்டனர் என்றும் -

அவ்வாறு சிக்குண்டவர்களும் அவர்களைக் காப்பாற்றுவதற்கு முயன்றவர்களுமாக மொத்தம் பத்துப் பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்றும் கூறப்படுகிறது.

சகதியின் அடியில் இருந்து மீட்கப்பட்ட பத்து சடங்கள் நேற்று முன்னிரவு மிருசுவில் படைமுகாம் அருகில் உள்ள இராணுவச் சிகிச்சை நிலையம் ஒன்றுக்கு எடுத்துவரப்பட்டன.

பருத்தித்துறை நீதிவான் பா.சுப்பிரமணியம் நேற்றிரவு அங்கு சென்று சடலங்களைப் பார்வையிட்டார். பிரேத பரிசோதனைக்காக அவற்றைக் கொழும்புக்கு அனுப்புமாறு அவர் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவத்தில் உயிர் தப்பிய படைச் சிப்பாய் ஒருவர் ஆபத்தான நிலையில் பலாலியில் உள்ள இராணுவ ஆஸ்பத்திரிக்கு கொண்டு சேர்க்கப்பட்டார்.

இந்த மரணங்கள் தொடர்பான விசாரணைகள் இரண்டொரு நாள்களில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இன்று மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் வரலாற்றுச் சிறப்பு மிக்க உரை இன்று மாலை 6.35 மணிக்கு இடம்பெறும். தலைவரின் உரை 'புலிகளின் குரல்' வானொலியில் ஒலிபரப்பாகும். உரை நிறைவு பெற்றதும் ஒரு மணித்துளி நேரம் சகல வழிபாட்டுத்தலங்களிலும் ஒலி எழுப்பப்படும்.

தொடர்ந்து மௌன வணக்கம், ஈகச்சுடர் ஏற்றல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்.

முன்னதாக நாளை மாலை மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஒவ்வொரு வலயங்களிலும் சிறப்பாக நடைபெறவுள்ளன.

வலிகாமம் வலயத்தில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றிலும் - வடமராட்சியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் - தென்மராட்சியில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும், தீவகத்தில் சாட்டி துயிலும் இல்லத்துக்கு அருகிலும் - மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கௌரவிப்பு நிகழ்வு நிறைவடைந்ததும் அந்தந்த இடங்களிலிருந்து துயிலும் இல்லங்களுக்கு அவர்கள் அழைத்துச்செல்லப்படுவர்.

இதேவேளை -

மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையவர்களை துயிலும் இல்லங்களுக்கு அழைத்துச் செல்வதற்கென விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

(ஐ-4-5-86-173-30-17-70)

## மரண அறிவித்தல்கள்

### துரையப்பாப்பத்தர் இராஜகோபால்

யாழ்ப்பாணம், கன்னாதிட்டியைச் சேர்ந்தவரும் யாழ். கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தான சபைத் தலைவருமாகிய துரையப்பாப்பத்தர் இராஜகோபால் அவர்கள் நேற்று (26.11.2003) புதன்கிழமை இறையடி சேர்ந்தார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெகநாதன், சரோஜா, துரைரெத்தினம், இராஜேந்திரன், குணரெத்தினம், சுசீலா, சியாமளா, ஆனந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் வைகுந்தன், இராஜேஸ்வரி, தர்சினி, நிஷாந்தன், சுகன்யா, ஜெயந்தன், இராகேசன், சங்கவி, சிவதீபன், ஆரபி ஆகியோரின் அன்புப் பேரனும் கிருஸ்ணகுமார் (ஆசிரியர், யா/இந்துக் கல்லூரி), சாந்தகுமார், ஜீவராஜ், வளர்மதி, உமாதேவி, கோணேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கிருஷ்ணசாமி மற்றும் பஞ்சரட்ணகோபால், காலஞ்சென்ற வேணுகோபால் மற்றும் கோபாலசாமி, காலஞ்சென்ற இராசாமணி, காலஞ்சென்ற ஞானம்மா, காலஞ்சென்ற மஹாலட்சுமி மற்றும் ஜெயலட்சுமி, காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பாக்கியலட்சுமி, வரதலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2003) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக யாழ்ப்பாணம் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து.இ.ஜெகநாதன்
(மகன்)

*127, கன்னாதிட்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி-31526) (25)

### செல்லையா (கனகு) அன்னலட்சுமி

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அன்னலட்சுமி நேற்று (26.11.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் தெய்வேந்திரம் (காந்தன் மில், கொழும்புத்துறை), இராசரத்தினம் (அத்தான், பிள்ளையார் ஸ்ரீஸ்ட் அண்ட் லேணர்ஸ்) மற்றும் காலஞ்சென்ற காந்திமதி, சூரியகுமாரி (ராணி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2003) வியாழக்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. தெய்வேந்திரம் - மகன்,
செ.இராஜரட்ணம் - மகன்,
க.கிருஷ்ணாந்தமூர்த்தி - மருமகன்.

*56, ஆடியபாதம் வீதி,*
*நல்லூர் சந்தை,*
*கல்வியங்காடு.* (25147)(31-36-3218)


ஸ்ரார்
கல்வி நிலையம்
புதிய கல்வி
ஆண்டுக்கான 2004
தரம் 5 முதல் 11 வரை வகுப்புகள்
ஆரம்பம்: 30.11.2003
சுன்னாகத்தில் 8.30 மணிக்கு
மல்லாகத்தில் 3.00 மணிக்கு

எலைற்
கல்வி நிறுவனம்
147, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
புதிய கல்வியாண்டு 2004
தரம் 3 முதல் O/L வரை
அனைத்து வகுப்புக்களும்
ஆரம்பம்: 29.11.2003
சனி காலை 8மணி
★ அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- நிர்வாகி.
(25997)(16-17)

NEW SCIENCE COLLEGE
JAFFNA
சடப்பொருளியல்
SAT., SUN. - 6.00 - 7.00 (a.m.)
ஆரம்பம்: 29.11.2003
சடமும் கதிர்ப்பும்
பிரிவு 1 Mon. ⇒ Fri. 7.00-8.00(a.m.)
பிரிவு 2 Mon. ⇒ Fri. 1.00-2.00(p.m.)
ஆரம்பம்:01.12.2003
By- கருணாநிதி B.Sc. (Spl.)
குறிப்பு: இவ்விடுமுறைக்காலத்தில் இவ்வலகு பூர்த்தியாக்கப்படும். வகுப்பு நேரம் பற்றிய இறுதிமுடிவு முதல் வகுப்பில் எடுக்கப்படும்.

NEW SCIENCE CENTRE
மணிக்கூட்டு வீதி, யாழ். நகர்
A/L 2005
"ஒளியியல்"
Sat., Sun., 10 - 11a.m.
By : ஜெயசீலன்
INORGANIC
CHEMISTRY
Sat., Sun., 11 - 12 a.m.
By : அன்பழகன்
(25115) (22-16-17)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.11.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.